www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE , FRANCE

Raya

வெளியீடு : அரசியல்பிரிவு தமிழீழ விடுதலைப் புலிகள் மே 89 குரல் 11 அன்பளிப்பு ரூ. 2.



லெப். கேர்ணல் நவம் (அருமைராஜ்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேஜர் முரளி (ரத்தினலிங்கம் (23.12.87)



கப்டன் நரேன் (இரைத்தனன்) (28.4.88)

www.tamilarangam.net

# புலிகளின் குரல்

## ஆக்கிரமிப்பு நோக்கம் அம்பலமாகியது

ஈழத் தமிழர்களின் 40 ஆண்டு காலப் பிரச்சினையைத் தீர்ப்ப தற்காக சிங்கள அரசை வழிக்குக் கொண்டுவந்து தமிழர் களுக்காகத் தானே சிங்கள அரசுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட தாகவும், அதை தமிழர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறி இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தமிழர்கள் மீது திணித்த இந்திய அரசு, அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்து வதற்காக என்று கூறி பெருமளவு இந்திய இராணுவத்தை "அமைதி காக்கும் படை" என்ற பெயரில் தமிழீழத்துக்கு அனுப்பிவைத்தது.

ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வந்த இந்தியப்படை தமிழ் போராளிகளின் அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகளின் ஆயுதங் களைப் பறிப்பதுதான் தன் ஒரே கடமை என்றவாறு செயற்பட்டது.

இலங்கை அரசின் ஒப்பந்த மீறல்களைத் தடுத்து நிறுத்தி ஒப்பந்தத்தின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தும்படி விடுதலைப் புலிகள் இந்திய அரசுக்கு விடுத்த கோரிக்கைகள் உதாசீனப்படுத்தப் பட்டதையடுத்து அக்கோரிக்கைகளை வலியுறுத்தி தியாகி திலீபன் சாகும்வரை உண்ணாவிரதம் போராட்டத்தை சாத்விகமுறையில் நடத்தியபோதும் அதையும் உதாசீனம் செய்து திலீபனைச் சாகடித்த இந்திய அரசு,

இலங்கை அரசு ஒப்பந்தவிதிகளை மீறி 17 விடுதலைப் புலிகளை கைது செய்து கொழும்புக்கு கொண்டுசெல்ல அனுமதித்ததன் மூலம் 12 விடுதலைப் புலிகளின் மரணத்துக்கு காரணமாக இருந்த இந்திய அரசு,

ஒப்பந்தப்படி, ஒப்பந்தம் கையெழுத்தாகி ஆறுவார காலத்துக்குள் இந்திய இலங்கை அரசுகள் கலந்துபேசி மாகாணசபைகளின் அதிகாரங்களை வரையறுத்துக்கொள்ள வேண்டும் என்று இருக் கின்றதே - கடந்த இரண்டு ஆண்டு காலமாக அந்த மாகாண சபைக்கான அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்காத இந்திய அரசு,

ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருப்பதற்கு மாறாக இந்திய அரசைக் கலந்துகொள்ளாது தன்னிச்சையாக ஒப்பந்த விதிகளுக்கு மாறான மாகாணசபைச் சட்டத்தை பாராளுமன்றத்தில் இலங்கை அரசு நிறைவேற்றியபோது அதைத் தடுத்து நிறுத்தாத இந்திய அரசு,

ஒப்பந்தப்படி ஆகஸ்ட் 87-ல் இலங்கையின் அவசரகாலச் சட்டம் (நெருக்கடிநிலைச் சட்டம்) நீக்கப்படாது மேலும் 1½ ஆண்டுகள் அது நீடித்ததை அனுமதித்த இந்திய அரசு,

ஒப்பந்தத்தை மீறி வடக்கு கிழக்கு இணைப்புக்கு நிரந்தரமாக உலைவைக்கும் வகையில் பெருமளவு சிங்களக் குடியேற்றங்களை திட்டமிட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் உள்ள மணல் ஆற்றுப்பகுதியில் (வெலி ஓயாவில்) இலங்கை அரசு மேற் கொண்டு வருவதை இதுரையில் தட்டிக் கேட்காத இந்திய அரசு,

ஏன் அண்மையில், "தேர்தல் முடிந்து 6 மாதங்களுக்கு மேலாகியும் இலங்கை அரசு அதிகாரங்கள் எதையும் மாகாண

## வேலி

எங்கள் காடு
அவனைப் பாதுகாத்ததா?
இல்லை...
அவனே
எங்கள் காட்டைப்
பாதுகாத்தான்.

நெடிய மரங்களும்
குளங்களும்
மானும் மர அணிலும்
யானைகளும்...

ஓ! அழகான எங்கள்
காட்டுக்கு
வேலியாய் நின்றவன்.

ஒரு கைதான்
அவனுக்கு ..

ஆனால்—

எதிரிகளின்
பல கைகள்
அவனால்
துப்பாக்கியை இழந்தன.

நவம்
போய்விட்டானாம்.

காட்டில்—

அவன்
காலடிச் சுவடுகள்...



லெப்டினண்ட் கேர்ணல் நவம்

www.tamilarangam.net



*சபைக்கு வழங்கவில்லை" என்று தனது தாசர்களான வரதராஜப்பெருமாளும் குழுவினரும் ஒப்பாரி வைத்தபோதுகூட, "ஏன் அதிகாரங்களை வழங்கவில்லை?" என்று இலங்கை அரசிடம் நியாயம் கேட்காத இந்திய அரசு,*

*"இரண்டு ஆண்டு பணி போதும் இந்தியப் படையே திரும்பிப்போ" என்று சிறீலங்கா அதிபர் பிரேமதாச அறிவித்த மறுநிமிடமே "ஒப்பந்தத்தை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை. ஒப்பந்தத்தின் படி மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப் பட்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டால்தான் இந்தியப்படை வெளியேறும். அதுவரை வெளியேறாது" என்று ஆவேசத்துடன் அலறுகிறது; ஆத்திரத்துடன் எகிறிக் குதிக்கிறது.*

*இரண்டு ஆண்டுகாலமாக "இலங்கை அரசின் ஒப்பந்த மீறல்களைத் தடுத்து நிறுத்து! ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி மாகாணசபைக்கு அதிகாரங்களைப் பெற்றுக்கொடு" என்று தமிழ் மக்களால் விடுக்கப் பட்ட கோரிக்கைகளை செவிமடுக்காது புலி வேட்டையை மட்டுமே மேற்கொண்டிருந்த இந்திய அரசுக்கு "படையைத் திருப்பி அழை" என்று சொன்னதும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்மீது திடீர்பற்று, கரிசனை ஏற்பட்டிருக்கிறது.*

*"இலங்கையின் ஒற்றையாட்சி முறைக்கு ஊறு நேராத வகையில் இலங்கையின் அரசியலமைப்புக் குட்பட்டே ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும்" என்று இலங்கை அரசைவிட இலங்கை ஆளும் வர்க்கத்தைவிட இலங்கையின் இறைமையில் அதிக அக்கறை காட்டிவந்த இந்திய அரசு இன்று திடீரென்று இலங்கை அரசு படையை திருப்பி அழைக்கச் சொன்னதும், ஐந்தாம்படைத் தளபதி பெருமாளின் பிரிவினை முழக்கத்தை தனது தொலைக்காட்சியிலும், வானொலியிலும் முழங்கி வருகிறது.*

*ஈழத்திலும் உலகமெங்கிலும் பரந்து வாழும் தமிழர்களும் பல்வேறு அமைப்புகளும் நீண்டகாலமாக இந்தியப்படையை திருப்பி அழைக்கும்படி கோரிக்கைவிடுத்த போதெல்லாம் "இந்தியப் படையை அழைத்தது இலங்கை அதிபர்தான். அவர் திரும்பிப்போகும்படி கூறினால் உடன் திருப்பி அழைக்கப்படும்." என்று கடந்த 3 மாதங்களுக்கு முன்வரை கூறிக்கொண்டிருந்த இந்திய அரசு, "செய்த பணி போதும் 29 ஜூலைக்குள் திரும்ப வேண்டும்" என்று இந்தியப்படைக்கு இலங்கை அதிபர் காலக்கெடு விதித்ததும்* **வழமைக்கு மாறாக, காட்டிவருகின்ற பதட்டம், பரபரப்பு, ஆத்திரம், ஆவேசம் இவை எல்லாம் அதன் ஆக்கிரமிப்பு நோக்கத்துக்கு; நடவடிக்கைகளுக்கு குந்தகம் வந்துவிட்டதே என்ற ஏமாற்றத்தினால்தான் என்பது நன்றாகப் புரிகிறதல்லவா?**

## உள்நோக்கம் புரிகிறது

இந்தியப்படையின் ஒரு வீரரைக்கூட திருப்பி அனுப்பினால் சுதந்திர ஈழம் பிரகடனப்படுத்தப்போவதாக வடகிழக்கு மாகாண "பெருமுதல்வர்" வரதராஜப் பெருமாள் கூறி வருகிறார். ஒரு லட்சம் இந்தியப்படையை வைத்துக்கொண்டு **வட கிழக்கின் தமிழர் பகுதிகளை (சிங்களவர் குடியேறிய பகுதிகளை அல்ல)** சுதந்திர ஈழமாகப் பிரகடனப்படுத்தினால் அது சுதந்திர நாடாக இருக்குமா?

இந்திய அரசு எழுதிக் கொடுத்ததை அப்படியே ஒப்புவிக்கிறார் பெருமாள்.

இந்தியாவின் காலனியாகக்கூட அல்ல - தனது மாநிலங்களிலொன்றாக தமிழீழப் பகுதியை ஆக்குவதே இந்தியாவின் நோக்கமாக இருக்கிறது.

அண்மையில் வடகிழக்கு மாகாண சபையின் முதல்வர் வரதராஜப் பெருமாள் "மத்திய அரசு வடகிழக்கையும் இலங்கையின் ஒரு பகுதியாக நினைக்க வேண்டும். எனினும் அதன் நடவடிக்கைகள் வடகிழக்கை இந்திய மாநிலமாக ஆக்குவதாகவே உள்ளன. அவர்கள் தெளிவாகத் தமது நிலைப்பாட்டைக் கூறினால் நாமும் எமது கருத்தைக் கூறக் கூடியதாக இருக்கும்" (27-2-89 வீரகேசரி) என்று திருவாய்மலர்ந்திருப்பது இதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

---

### விடுதலைப் பசியோடு.........

**"காட்டின் நடுவில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் முகாம் பெரிதாக இருக்கிறது. ஆண் புலிகளுக்கும் - புலி வீராங்கனைகளுக்கும் தனித் தனி தங்குமிடங்கள் உள்ளன. புகைத்தலும் - மது குடித்தலும் முற்றாகத் தடுக்கப் பட்டிருக்கிறது. தலைவர் பிரபாகரனும் புலி வீரர்களும் ஒரே உணவையே சாப்பிடுகிறார்கள். உணவுப்பொருள் நிறைவாக இருந்தால் நிறைய உண்கிறார்கள். பற்றாக்குறை ஏற்படும்போது உள்ளதைப் பகிர்ந்துகொள்கிறார்கள். அப்படியான நேரங்களில் ஒரு நாளைக்கு ஒரு தடவையே அவர்கள் சாப்பிடுகிறார்கள்."**

THE ILLUSTRATED WEEKLY of India May 21-1989.

---

www.tamilarangam.net

## ராஜீவ் அரசின் சுயநலப் போக்கும், ஐந்தாம்படைகளின் துரோகங்களும் - 2

சென்ற இதழ் தொடர்ச்சி......

இன்று, ''மாவட்ட ஆட்சித் தலைவர் (GA) நிர்வாகத்தில் கடைநிலையில் பணியாற்றும் கிராம சேவை அதிகாரிகள் கூட மத்திய அரசின் கீழ்தான் தொடர்ந்தும் பணியாற்றுவார்கள். அவர்களது பணி மாகாணசபையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படவில்லை என்று மத்திய அரசின் பொது நிர்வாக அமைச்சர் திரு. யூ. பி. விஜேகோன் பத்திரிகையாளர்களைக் கூட்டி பேட்டி அளித்திருக்கிறார்.

''தமிழ் மொழி நாட்டின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டுவிட்டது. தமிழ் மொழிக்கு சம உரிமை கிடைத்துவிட்டது'' என தேர்தல் அறிக்கை வெளியிட்டு வெறும் காகிதச் சட்டத்துக்காக புளகாங்கிதம் அடைந்தது தமிழர் விடுதலைக் கூட்டணி.

ஆனால் இன்று, ''16-வது அரசியற்சட்டத் திருத்தத்தின் மூலம் தமிழ் ஆட்சிமொழியாகிவிட்டது என்று உலகம்முழுவதும் தம்பட்டமடிக்கப்படுகிறது. ஆனால் அச்சட்டத் திருத்தத்தை அரசு நிராகரிக்க வேண்டும் என்று புகார் செய்திருக்கின்றனர்.

இலங்கை அரசு மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைதையும் வழங்குவதாகவுமில்லை. ராஜீவ் அரசும் ஒப்பந்தப்படி அதிகாரங்களை ஏன் இன்னும் வழங்கவில்லை என்று இலங்கை அரசைத் தட்டிக் கேட்க முன் வரவுமில்லை.

உண்மையிலேயே தமிழர்களுக்கு உரிமைகளை, அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கம் ராஜீவ் அரசுக்கு கிஞ்சிற்றும் இல்லை. இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பது போலவும் உரிமைகளைப் பெற்றுத் தர உதவுவது போலவும் பாவனை காட்டிக்கொண்டு தமிழீழப் பகுதியில் குறிப்பாகத் திருகோணமலையில் தனது படைகளைத் தொடர்ந்து நிலைகொள்ள வைப்பதே ராஜீவ் அரசின் உள்ளார்ந்த நோக்கமாக இருந்தது.

அதிகாரமெதுவுமற்ற வெறும் பொம்மை முதல்வராக வைக்கப்பட்டிருந்த வடகிழக்கு

# தமிழீழத்தில் தொடர்ந்து நிலைகொள்வதே ராஜீவ் அரசின் திட்டம்

இயற்றிய பாராளுமன்றத்தின் அலுவலகத்தில் கூட தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு வருகிறது.'' இதை எங்கே போய்ச் சொல்வது என்று பாராளுமன்றத்திலேயே புலம்பியிருக்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தளபதியும், செயலதிபருமான அமிர்தலிங்கம்.

''மாவட்ட செயலகங்கள் மாகாண அரசின் கீழ்தான் இயங்கும்'' என இலங்கை அரசு வழங்காத அதிகாரங்களைத் தானே எடுத்துக் கொள்வது போல, தனி அரசை நடத்துவது போல அரசு அதிகாரிகளை அழைத்து மாநாடுகள் கூட்டி வீராவேசமாகப் பேசி வந்தார் வடகிழக்கு மாகாணப் ''பெருமுதல்வர்'' வரதராஜப்பெருமாள்.

ஆனால் இன்று அதே அரசு அதிகாரிகள் வடகிழக்கு மாகாண சபையினால் அச்சிடப்பட்ட ''லெட்டர் பாட்''டில் மாகாண அரசு என்று குறிப்பிடப்பட்டிருப்பதை ஆட்சேபித்து வடகிழக்கில் இயங்குவது வெறும் மாகாண சபைதான் - மாகாண அரசு கிடையாது - மாகாண அரசு என்று குறிப்பிட்டுள்ள மாகாண சபையின் ''லெட்டர் பாட்''டை இலங்கை மாகாண ''முதல்வர்'' வரதராஜப்பெருமாள் அவமானம் தாங்க முடியாத நிலையில் ''இலங்கை அரசு மாகாணசபைகளுக்கு எதுவித அதிகாரங்களையும் தரவில்லை - இந்திய அரசு உடனடியாகத் தலையிட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி அதிகாரங்களைப் பெற்றுத் தர வேண்டும்'' என்று அறிக்கைகளை விட்டார்.

> ''மாகாணசபையின் செயலாளர் மற்றும் உயர் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை நியமிக்கும் விடயத்தில் மத்திய அரசின் ஒத்துழைப்பு இல்லை. அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்க மறுக்கின்றனர்.''
>
> ''அதிகாரங்களைப் பரவலாக்குவது தொடர்பாகப் பல அமைச்சுகள் எங்களுடன் பேசுவதற்குக்கூட பின் நிற்கின்றன.''
>
> ''13-வது திருத்தச் சட்டத்தில் குறைபாடுகள் இருக்கின்றன. அதைத் திருத்தாமல் மாகாணப் போலீஸ் அதிகாரியை நியமிக்க முடியாதென போலீஸ் மா அதிபர் கையை விரிக்கிறார்.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''பிரஜைகள் தொண்டர்படை ஜனாதிபதி யின் சட்ட அங்கீகாரத்துடன் உருவாக் கப்பட்டபோதிலும் இலங்கை அரசு அதற்கு இதுவரை எந்த வகையிலும் உதவவில்லை.''

''மாவட்ட அரசாங்க அதிபரை (ஆட்சித் தலைவரை) விடக் குறைந்த நிலையி லேயே மாகாண சபை நோக்கப் படுகிறது''

''மத்திய புனர்வாழ்வு அமைச்சு மாகாண அமைச்சு ஒன்று இருப்பதையே கண்டு கொள்ளாது தனது அரசு அதிகாரிகளி னூடாக நேரடியாகவே நடவடிக்கை களை மேற்கொள்கிறது.''

என்றெல்லாம் வடகிழக்கு மாகாண முதல்வர் வரதராஜப்பெருமாள் புலம்பிய போதுகூட ராஜீவ் அரசு அதை பொருட் டாகவே எடுத்துக்கொள்ளவில்லை. ஒப்பந்தத் தில் குறிப்பிட்டபடி மாகாணசபைகளுக்கு உரிய அதிகாரங்களை உடனடியாக வழங்கும்படி இலங்கை அரசை அது வற்புறுத்தவுமில்லை.

ஆனால் ''ஜூலை 29-ந்தேதிக்குள் இந்தியப் படைகள் முழுவதும் திரும்பப் பெறப்பட வேண்டும்'' என்று இலங்கை அதிபர் பிரேம தாசா அறிவித்ததும் ராஜீவ் அரசு தனது ஆக்கிரமிப்பு நோக்கத்துக்கு குந்தகம் வருகிறதே என்று அலறி அடித்துக்கொண்டு ''இந்திய - ஒப்பந்தப்படி மாகாணசபைகளுக்கு அதிகாரங் களை இலங்கை அரசு வழங்கவேண்டும். இலங்கை - இந்திய ஒப்பந்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும். அதன் பின்னர் தான் இந்தியப்படை வெளியேறும்'' என்று கூற ஆரம்பித்திருக்கிறது.

அது மட்டுமல்ல ராஜீவ் அரசு தனது ஐந்தாம் படையான ஈ. பி. ஆர். எல். எப். கும்பலைத் தூண்டிவிட்டு சுதந்திர ஈழ முழக்கங்களை தனது தொலைக்காட்சியிலும், வானொலி யிலும் முழங்கிவருகிறது.

சுதந்திர ஈழத்தைப் பிரகடனப்படுத்தப் போவதாக 1 இலட்சம் இந்தியப் படைக்கு நடுவில் நின்று அவர்கள் எழுதிக் கொடுத்த வசனங்களை - தங்களை விடுதலை வீரர்களைப் போல் காட்டிக்கொண்டு - வீராவேசமாக முழங்கிவரும் பெருமாளும் அவர் தம் குழு வினரும் (ஈ. பி. ஆர். எல். எப். குழுவினரும்) தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆற்றிய பங்குதான் என்ன?

1976-ல் தமிழீழ விடுதலை இயக்கம் என்ற பெயரில் ஒரு குழுவாக இயங்கி புலோலி வங்கிக் கொள்ளையில் இறங்கி சிலர் கைதாகியதுடன் அதைத் தொடர்ந்து பெரும்பாலானோர் போலீசாரால் தேடப்பட்டு நெருக்கடியான சூழ்நிலை வந்தபோது, தமது இயக்கத்தின் பெயரை இன்னொரு குழுவுக்கு குத்தகைக்கு விட்டுவிட்டு அஞ்ஞாதவாசம் புகுந்தார்கள். பின்னர் லண்டனில் தொடக்கப்பட்ட ஈழப் புரட்சியமைப்பில் இணைந்து அங்கும் தொடர்ந்து இருக்க முடியாமல் அங்கிருந்து பிரிந்து E. P. R. L. F. என்று ஆனார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத் தைக் காட்டிக் கொடுத்து வந்த இனத் துரோகிகளை அழித்து, விடுதலை இயக்கங்கள் வளர விடாது முளையிலேயே கிள்ளி எறியும் பணியில் ஈடுபட்ட சிங்கள அரசின் இரகசிய போலீஸ் படையை முற்றாக நிர்மூலமாக்கி விடுதலைப் போராட்டத்துக்கான தடங்கலற்ற பாதையையும், போராட்டத்துக்கான சூழ் நிலையையும் விடுதலைப் புலிகள் ஏற்படுத்திய போது அந்த நடவடிக்கைகளை தனி நபர் பயங்கரவாதம் என்றும் போராட்டத் துக்கான சூழ்நிலை ஏற்படவில்லை என்றும் திண்ணை வேதாந்தம் பேசிக்கொண்டிருந்த வர்கள், தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்று கூறுவதே பஞ்சமாபாதகம் என்பது போல ''தமிழீழம் என்று அழைக்கக்கூடாது, இயக்கப் பெயரில் நாட்டுப் பெயரில் தமிழ் என்ற வார்த் தையே வரக்கூடாது'' என்று வரட்டுத் தத்து வங்களை உதிர்த்துக்கொண்டு இருந்தவர்கள்,

இந்திய அரசின் உளவுப்படையான ''ரா'' அமைப்பினால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக திட்டமிட்டு வளர்க்கப்பட்டு, அவர்களிடமே பயிற்சியும், உதவியும் பெற்று அவர்களாலேயே ஒரு போராளிகள் குழுவாக ஆக்கப்பட்டார்கள்.

1985-ல், திம்பு பேச்சுவார்த்தையின்போது விடுதலைப் புலிகளும் ஏனையோரும் சேர்ந்து சமரசப் பேச்சுவார்த்தையில் பங்குபற்று வதற்கு இலங்கை அரசுக்கு விதித்த 4 முன் நிபந்தனைகளை, இந்திய அரசு கொடுத்த அழுத்தத்தினால் காற்றிலே பறக்க விட்டுவிட்டு- தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளையே தீர்க்க முடியாத இந்திய இலங்கை ஒப்பந் தத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்று — அந்த ஒப்பந்தத்தில் கிடைத்த அரைகுறை உரிமை களையும்கூட உறுதி செய்து கொள்ளாது - தமிழீழ மக்களின் உணர்வுகளுக்கும் விருப்பத் துக்கும் இலங்கை மாகாணசபைத்தேர்தலிலும் மாறாக இந்திய அரசின் கட்டளைப்படி பங்கு பற்றி இந்த இனத் துரோக நடவடிக்கைகளுக் குப் பரிசாக ஒரு துப்பாக்கிமுனைத் தேர்தலின் மூலம் இந்தியப்படைகளினால் மாகாணசபை ஆட்சியில் அமர்த்தப்பட்டார்கள்.

(தொடரும்)

www.tamilarangam.net



20-4-1989-இல் வெளியான 'உதயன்' செய்தி நாளேட்டின் பக்கங்களைப் புரட்டுகிறேன்.

எத்தனை கொடுமை.

நிகழ்வு நடந்த நாள் மட்டும் சேதியில் இல்லை.

ஆனால்......

1989 பங்குனியில் அந்தக் கொடுமை நிகழ்ந்திருக்க வேண்டும்.

கண்கள் பனிக்கின்றன.

பத்தக்குட்டி மரகதத்தை எனக்குத் தெரியும்.

அசைவற்றுப் போகிறேன்.

என் மகள் பக்கத்தில் வந்து 'ஏனப்பா அழுறீங்க?' என்று கேட்கிறாள்.

கள் 'கடமுட' என்று நிலத்தில் கோடு கிழித்து நடக்கும்.

சிங்களக் குடியேற்றம் கட்டு முறிவில் பல முறை தலை நீட்டியிருக்கிறது. அப்போதெல்லாம் தமிழர்கள் திட்டமிட்டு இக்காட்டு நிலத்தைக் காப்பாற்றி இருக்கிறார்கள். தமிழர்களின் தாய்மண் என்பதால் கட்டுமுறிவை இழந்துவிடக் கூடாது என்பதில் தமிழர்கள் உறுதியாக இருந்தார்கள். வட முனை - கட்டுமுறிவு போன்ற கிராமங்களில் சிங்களவனுக்கு எப்போதுமே ஒரு கண்தான். புத்தகத்தின் ஓரத்தை முதலில் தின்னும் புழுவைப்போல் தமிழீழத்தின் இந்த எல்லைக் கிராமத்தையும் விழுங்கவே

சிங்கள வெறிப்படை பல முறை இந்தக் கிராமத்துக்குள் நுழைந்து தமிழர்களை அடித்து விரட்டி இருக்கிறது. எப்படியாவது தமிழர்களை அச்சுறுத்தி வெளியேற்றிவிட்டு இக் கிராமத்தைச் சிங்கள மயமாக்க வேண்டும் என்றே அரசு திட்டமிட்டது. ஆனால் தமிழர்களோ மீண்டும் மீண்டும் அந்த மண்ணிலேயே உட்கார்ந்தார்கள். மரகதமும் அவர் குடும்பமும் அந்த மண்ணைவிட்டு அசையவே இல்லை.

★

விடுதலை உணர்வு நகர்ப் புறங்களை விடக் கிராமங் களிலேயே எப்போதும் வீரியமாய் எழுகிறது.

# ஓநாய்களின் மகிழ்ச்சிக்காக....

நிமிர்ந்து பார்க்கிறேன்.

கேள் மகளே......

★

தமிழீழத்தின் எல்லையில் கட்டுமுறிவு அழகான சிற்றூர். ஒருகாலத்தில் இரண்டு மூன்று குடிசைகளோடு மட்டக் களப்புப் பெருநிலத்தின் ஒரு மூலையில் இந்தப் பழைய காட்டுக் கிராமம் கிடந்தது. தேக்கு கருங்காலி முதிரை என்று ஓங்கி வளர்ந்த மரங் களின் நிழலில்-இந்தப் பச்சைக் காட்டில் - வேட்டையாடுகிற வர்கள் தங்கிச் செல்வார்கள்.

செழிப்பான மண். காலை விடியலில் பறவைகளின் கீச்சொலி கிளம்பும். நெடிய மரங்களில் குரங்குகளின் தாவல். சோளக் கொல்லையில் விழும் கிளிகளை விரட்டும் சிறுவர்களின் அட்டகாசம். ஓரிரு கட்டை மாட்டு வண்டி

சிங்கள ஆக்கிரமிப்பாளார்கள் முயன்றார்கள்.

பத்தக்குட்டி மரகதம் கட்டு முறிவில் துடிப்பான மனிதர். கிராம மக்களோடு மனம் விட்டுப் பழகுவார். அவருக்குத் தனி மதிப்புண்டு. அந்த மண்ணைச் சிங்கள ஆக்கிர மிப்புக்குப் பலி ஆகாமல் காப் பாற்றியவர்களில் அவரும் ஒரு வர். நாற்பது வயதுதான். காடுவெட்டி - பயிர் - போட்டு- மண்ணோடு மண்ணாக வளர்ந் தவர் மரகதம்.

தன் மண்ணை உயிராகவே அவர் நினைத்தார். காட்டுப் புறத்தில் அந்த மக்களைப் பார்த்து மரகதம் அடிக்கடி சொல்லுவார்:- 'கட்டு முறிவில இருக்கிற மனுசனுகள் மட்டுந் தான் தமிழர்களா? இல்லடா... இந்த மரங்கள் கூடத் தமிழ் மரங்கள்தான். இது தமிழன் மண்.''

அரசுத் தொழிலில் அமர்ந்து 'உங்கள் கீழ்ப்படிவுள்ள ஊழியன்' என்று கையெழுத்துப் போட்டுப் பழக்கமில்லாத காட்டு உழவர்கள்......

பத்தக்குட்டி மரகதம் உறுதியானவர். மண்வெட்டி பிடித்து உரமேறிய கைகள். இறுகிப் போன உடல்கட்டு. பெரிய அளவு அரசியல் தெரிந்த மேதையாக இல்லையென்றாலும் ஒரு கிராமத்தானிடம் இயல்பாகவே இருக்கும் 'மானம்' அவரிடம் இருந்தது. விடுதலைப் புலிகளோடு இந்தியப் படை சண்டை போடத் தொடங்கிய சேதி, மட்டக்களப்பில் பரவியபோது ''என்ன இழவுக்குடா இந்தச் சண்டாளனுகள் வந்தவனுகள்...... வெள்ளாமையை மாடு தின்னுது - ஆரும் வந்து மாட்டை விரட்ட மாட்டானுகளா எண்டு பார்த்தா - வந்தவனுகள் இருந்த வேலியையும்

www.tamilarangam.net



எலுவா உடைக்கிறானுகள்' என்று குமுறி வெடித்தவர் மரகதம்.

சிங்களக் குடியேற்றத்தை இந்தப் பகுதிகளில் விடுதலைப் புலிகள்தான் ஓரளவு தடுத்து நிறுத்தினார்கள் என்பது அவருக்குத் தெரியும்.

அதனால்......

இந்தியப்படை விடுதலைப் புலிகள் மீது பாய்ந்தபோது அவருக்கு ஏனோ உணவு இறங்கவில்லை. பத்தக்குட்டி மரகதம் விடுதலைப் புலி அல்ல. விடுதலைப் புலிகளின் போராட்டம் நியாயமானது என்று கருதும் பல இலட்சம் தமிழீழ மக்களில் அவர் ஒருவர். அவ்வளவுதான். தமிழீழத்தில் மிகப் பெரிய எண்ணிக்கையில் இந்தியப்படையினர் துப்பாக்கிகளோடு குவிந்து - அந்த மண்ணைத் தங்கள் காலின் கீழே போட்டு மிதித்து வெறியாடிய நிகழ்வு ஒவ்வொன்றும் அவரை வாட்டி வதைத்தது உண்மை. 'இது பஞ்சமா பாதகம் இல்லையாடா தம்பி?' என்று பித்தம் பிடித்தவரைப் போல் ஊரில் யாரைப் பார்த்தாலும் கேட்டார் அவர்.

விளைவு......

★

கட்டு முறிவில் மின்மினிப் பூச்சிகளாய் ஆங்காங்கே குப்பி விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன.

இரவு 7-மணி.

மரகதத்தின் வீட்டு வாசலில் மாட்டுக் கன்று 'அம்மா' என்று வாய்கிழியக் கத்தியது. மரகதத்தின் மனைவி உன்னிப்பாகக் கவனித்தாள்........படலையைத் திறந்துகொண்டு யாரோ கூட்டமாக வீட்டை நோக்கி வருகிறார்கள்......

புதிய மொழிக் குரல்கள்.

'ஆரது?' முற்றத்தில் நின்ற கூட்டத்தைப் பார்த்து மரகதம் கேட்டார்.

இப்போது தெரிகிறது.

குப்பி விளக்கு வெளிச்சத்தில் இந்தியப் படைக்கும்பலை அவர்கள் பார்க்கிறார்கள்.

'நீதானே மரகதம்?'

'ஓம்.'

'பெரிய ஐயா உன்னைக் கூட்டிவரச் சொன்னார்.

'ஓ! அதுக்கென்ன வாறன்.'

'மனைவியும் பிள்ளைகளும் நின்ற பக்கம் திரும்பினார் மரகதம்.

'என்னத்துக்கு இவரைக் கொண்டு போறீங்க எண்டு சொல்லுங்க ஐயா......பயமா இருக்கு......'

மரகதத்தின் மனைவி அழத் தொடங்கிவிட்டாள். வந்த கும்பலுக்குப் பெரியவன்போல் இருந்தவன் சொன்னான்:-

'ஒன்றுமில்லை சும்மாதான்...'

தோளில் துண்டைப் போட்டுக் கொண்டு கிளம்பினார் மரகதம். புறப்படும் போது பிள்ளைகளை மீண்டும் ஒருமுறை அவர் பார்த்தார். விம்மலின் அலைகளாய் அவர் உதடுகள் நெளிந்து விரிந்தன.

காட்டில் தூரத்தில் எங்கோ ஆந்தைகளின் உறுமல் கேட்டது.

★

'மரகதத்தை எங்கே அப்பா கொண்டுபோறாங்க......?'

நீர்கோத்த விழிகளோடு 'உதயன்' நாளேடும் கையுமாக நின்ற என்னைப் பார்த்து மகள் கேட்கிறாள்.

'இந்தியப்படை முகாமுக்குத் தான்.'

'அங்கே கொண்டுபோய் என்ன அப்பா செய்வாங்க?'

நான் கல்லாகிறேன்.

தமிழீழ விடுதலைப் போரில் எதிரிகள் உருவாக்கும் இப்படியான கொடிய சூழலுக்கு என் மகளை நான் பழக்கி எடுக்கத்தான் வேண்டும்.

அவள் தலையை நான் தடவிக் கொடுக்கிறேன்.

கேள் மகளே......

★

மரகதத்தின் மனைவி இந்தியப்படை முகாமுக்கு மறுநாளே சென்று கணவனைப்பற்றிக் கேட்டாள்.

'அவரை விடுதலை செய்து விட்டோம்......' என்று பதில் வந்தது.

ஓர் இந்தியப்படை வெறியன் முரட்டுத்தனமாக அவளைப் பார்த்துச் சிரித்தான். கண்ணீரோடு திரும்பிய அவள் பக்கத்தில் நின்ற இன்னொரு இந்தியப் படைக்காரன் ஒரு விதமாகத் தும்மினான்.

நரிகளிடமிருந்து எப்படியோ தப்பிப் புதரை நோக்கித் தாவும் முயலைப் போல முகாமை விட்டு அவள் வெளியேறினாள்.

ஒரு வேளை அவள் இங்கே இந்தியப்படை முகாமுக்கு வர - மரகதம் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்திருப்பாரா? அவள் கால்கள் வீட்டை நோக்கி வேகமாக விரைந்தன. வீடு நெருங்க நெருங்க அவள் நெஞ்சம் விம்மிற்று.

படலையடியில் பிள்ளைகள் ஒழுங்கையையே பார்த்தபடி நின்றிருந்தார்கள்.

ஏக்கத்தோடு அவள் கேட்டாள். 'அப்பா வந்திட்டாரா?'

'இல்லம்மா......'

மரகதத்தின் மனைவிக்கு நெஞ்சம் நொறுங்கிற்று.

என்ன ஆனார் மரகதம்?

ஒரு நாள் - இரண்டு நாள் - மூன்று நாள் - நான்கு நாள் என்று நாட்கள் ஓடுகின்றன. அந்த வீட்டில் யாருமே உணவருந்தவில்லை. மரகதத்

www.tamilarangam.net



தின் பிள்ளைகள் பூனைக்குட்டி களைப் போல் வீட்டையே சுற்றிச் சுற்றி வருகிறார்கள்.

பத்தக்குட்டி மரகதம் வழக்க மாகச் சாய்ந்து உட்காரும் மூலைச் சுவர் - அவர் துணி காயப் போடும் அந்தக் கயிறு - நாள் தவறாமல் மரகதம் ஆட்டுக்குக் குழை கட்டித் தொங்கவிடும் மாமரம் - எங்கு பார்த்தாலும் மரகதமாகவே...

கணவனின் உருவம் மரகதத் தின் மனைவி நெஞ்சில் தோன் றித் தோன்றிக் கரைகிறது.

★

ஐந்தாம் நாள் காலை......

அப்படி ஒரு விடியல் பிறந் திருக்கவே வேண்டாம்......

அன்று காலை கதிரவன் கிளம்பிய போதுதானே பத்தக் குட்டி மரகதத்தின் வீட்டில் இருளே நுழையத் தொடங் கிற்று.

வாசலில் மீண்டும் அதே கும்பல்.

மரகதத்தின் மனைவி வந்த வர்களை அச்சத்தோடும்-அதே வேளை ஏக்கத்தோடும் பார்த் தாள். அவர்களில் மரகதம் இல்லை. வெறிபிடித்த அந்த விலங்குகள் மட்டுமே......

'அப்பா இன்னமும் வீட்டுக்கு வரல்லையே......ஐயோ எங்கட அப்பா எங்க...?' மரகதத்தின் ஒரு பிள்ளை தலையைக் கையால் அடித்துப் புலம்பத் தொடங்கியபோது அவர்கள் அட்டகாசமாகச் சிரித்தார்கள்.

ஓர் இந்தியப் படைக்காரன் 'கூய் ..!' என்று கத்தித் தன் பெரிய பண்பாட்டை வெளிப் படுத்தினான். அடுத்தவன் மரகதத்தின் மனைவியைப் பார்த்துச் சொன்னான்:-

'பெரிய ஐயா உன்னையும் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு வரட்டாம்...'

'எதுக்கு?'

'உன் புருஷனைப் பார்க்கத் தான்...'

அந்த நொடிப்பொழுதில் அவளுக்குப் போன உயிர் திரும் பியது போலவே தோன்றிற்று. இரவும் பகலுமாய் நான்கு நாட்கள் எப்படி எல்லாம் அவள் துடித்தாள்....இப்போது எங்கோ மரகதம் கைகால் களோடு நடமாடுவது போல வும் - உட்கார்ந்திருப்பது போல வும் - பேசுவது போலவும் சிரிப்பது போலவும்......

இந்தியப்படை முகாமை நோக்கிப் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு புறப்பட் டாள் அவள். நெஞ்சில் முழுமை யான அமைதி இல்லை. வீட்டு முற்றத்தில் இவர்கள் சிரித்தார் களே - ஏன்? ஒருவேளை அவர் உயிரோடு இருக்கிறாரா? இல்லையா? திரும்பவும் நம்பிக்கை உடைந்துநொறுங்கி பொல பொல என்று துண்டு களாய்ச் சிதறிவிழ ஒடுங்கி நடந் தாள் மரகதத்தின் மனைவி.

படை முகாமில் நுழையும் போதே மரகதத்தின் அலறல் 'ஐயோ, அப்பா...!' என்று மரண ஓலமாய்க் கேட்டது.

'அப்பா!' என்று கதறிக் கொண்டே உள்ளே மனைவியும் பிள்ளைகளும் ஓடினார்கள்.

ஒரு முரடன் அவர்களைத் தடுத்து நிறுத்தினான். அவர் கள் நிற்கவில்லை. திமிறிக் கொண்டு அந்தக் குடும்பம் ஆவேசமாக உள்ளே பாய்ந்தது.

நிலத்தில் அடி உதையால் சுருண்டு கிடந்த மரகதம் தலையை நிமிர்த்தி மனைவியை



www.tamilarangam.net



யும், பிள்ளைகளையும் பார்த்தார். அவர் கண்களில் நீர் காட்டாறாய்ப் பொங்கிற்று.

'பெரிய ஐயா' நாற்காலியில் இரு பக்கங்களும் கால்களை விரித்துப் போட்டபடி உட்கார்ந்திருக்க - முரட்டுத்தனமான கொடுமைகள் நிகழ்ந்து கொண்டிருந்த அந்த விலங்குகளின் முகாமில் மரகதத்தின் குடும்பம் துடியாய்த் துடித்தது.

'உன் புருஷன் கடைசியாக உன்னைப் பார்க்க ஆசைப்படுறான். அதுதான் உன்னை வரச் சொன்னது...' என்று பக்கத்தில் நின்ற தமிழ் தெரிந்த இந்தியப் படைக்காரன் மூலம் மரகதத்தின் மனைவியைப் பார்த்துச் சொன்னார் 'பெரிய ஐயா.'

'ஐயா......அவரை ஒண்டும் செய்யாதீங்க......விட்டுடுங்க ஐயா...' என்று கெஞ்சினாள் மரகதத்தின் மனைவி.

பிள்ளைகள் துடியாய்த் துடித்தார்கள்.

'பெரிய ஐயா' சிரித்தார். முரட்டுத்தனமான சிரிப்பு. கையில் இருந்த இயந்திரத் துப்பாக்கியைத் தன் தொடையில் அடித்துக்கொண்டே அவர் சொன்னார்:-

'எங்க படை ஆட்களை விடுதலைப் புலிகள் கொல்லும் போது - நாங்களும் யாரை யாவது கொன்றால்தான் எங்களுக்கும் சந்தோஷம்...'

திரும்பவும் அதே அட்டகாசமான சிரிப்பு.

சில படை வெறியர்களோடு எதையோ குசுகுசு என்று பேசி விட்டு வெளியேறினார் 'பெரிய ஐயா.'

பின்பு—

மரகதத்தை இந்தியப்படை முரடர்கள் அருகில் இருந்த கடையை நோக்கிக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு போனார்கள்.

'சுவரில் சாய்ந்தபடியே நில்!' என்று ஒரு வெறியன் கத்துவது கேட்டது.

மரகதத்தின் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் எதுவுமே புரியவில்லை.

ஒரே ஒரு மணித்துளிதான்...

வெடிகுண்டு ஒன்றின் பேரோசையோடு கடைச் சுவர் இடிந்து உடல் மேல் விழப் பிணமாய்ச் சாய்ந்தார் மரகதம்.

மனைவியும், பிள்ளைகளும் தூரத்தில் நின்றபடியே வெறி பிடித்துக் கத்தினார்கள்.

'ஜீப்' வண்டி ஒன்றும் 'ட்றக்'குகளும் வரிசையாக முகாமை விட்டு வெளியே புறப்பட்டுப் போயின.

அடுத்த 'சந்தோஷத்'துக்காக அவர்கள் எங்கே போகிறார்களோ......

★

'உதயன்' நாளேட்டைக் கீழே போட்டுவிட்டுப் பெருமூச்சோடு நாற்காலியில் சாய்கிறேன்.

கண்களில் நீர் பனிக்க 'இது என்ன கொடுமை அப்பா......!' என்று என் மகள் கைகளைப் பற்றிக்கொண்டு தேம்புகிறாள்.

'கேள் மகளே......'

மத்திய கிழக்கில் ஏரோது மன்னன் காலத்தில் இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். கிரேக்க நாட்டு ஆட்சியாளர்கள் சாக்கிரட்டீசுக்கு நஞ்சு கொடுத்துச் சாகடித்ததாக வரலாறு. பிரான்சில் பதினான்காம் லூயி மன்னன் ஆட்சியில் மக்களின் தலைகள் 'கிலட்டின்' என்ற கத்தியால் தறிக்கப்பட்டன. ரஷ்யாவில் லெனினின் அண்ணன் அலெக்சாண்டர் உல்யானோவ் 'சார்' ஆட்சியில் தூக்கில் போட்டுக் கொல்லப்பட்டான்.

இன்று—

இருபதாம் நூற்றாண்டு என்று மார்தட்டுகிறார்கள் அல்லவா? ராஜீவ் காந்தியின் படைகள் இன்னொரு நாட்டில் சுவரை இடித்து வீழ்த்தி மரகதத்தைச் சாகடித்தார்களே—இது வரலாற்றில் ஒரு புதுவிதமான முரட்டுக் கொலை.

மரகதம் பெரிய ஆள் அல்ல. ஆனால் அவர் கொலை பெரியது.

இப்படியான செந்நீர் வடுக்கள் வரலாற்றில் அழிவதில்லை மகளே......!"

★

## 2000 ஆண்டுகளில் ஓர் வீரத் தமிழன்



"பிரபாகரன் சுத்தமான வீரன் என்பதற்கு அவன் இரண்டு பலம் வாய்ந்த அரசுகளுடன் போராடிக் கொண்டிருக்கிறானே, போதாதா? சிறு வயதில் உள்ளவன். கொண்ட கொள்கைக்காகப் போராடி வருகிறான். அவன் வீரன்தான்.

புறநானூற்று காலம் படிக்கிறேன். அந்த தமிழர் வீரத்தைப் பற்றி படிக்கிறேன். எனக்கு 91 வயது. எவ்வளவோ படித்துள்ளேன். அதிலிருந்து கடந்த 2000 ஆண்டுகளில் தமிழர்களில் இப்படிப்பட்ட ஒரு வீரன் தோன்றவே இல்லை!"

*முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் 7-5-89 வீரகேசரிக்கு அளித்த பேட்டியில் இருந்து.*

www.tamilarangam.net

# தொடரும் அடக்குமுறைகள்

**மீன் பிடித் தடையால் மக்கள் அவதி!**

முல்லைத்தீவு மாவட்டம் அலம்பில் தூண்டாய் கடற்பகுதிகளில் கடந்த 20-3-89 முதல் இந்தியப் படையினரால் விதிக்கப்பட்டிருந்த மீன் பிடித் தடையையடுத்து அப்பகுதிகளில் வாழும் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

—சஞ்சீவி 25-3-89

**பிரச்சினையைத் திசைதிருப்ப குண்டு வெடிப்பு! கலவரம்!!**

இந்தியப் படையினரை வெளியேற்ற வேண்டும் என்று சிங்கள, தமிழ் மக்களின் குரல் அதிகமாக ஒலிக்கத் தொடங்கியதை அடுத்து அந்த எழுச்சியைத் திசை திருப்புவதற்காக இந்தியப்படை தன் கைக்கூலிகளின் உதவியுடன் தமிழீழத்தில் பெரும் குண்டு வெடிப்புகளை நிகழ்த்தி, முஸ்லீம்கள் மீது தாக்குதலை நடத்தி, முஸ்லீம் - தமிழர் இனக் கலவரங்களை உருவாக்கத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது.

அச் செயற்பாட்டின் ஒரு பகுதியே திருகோணமலையில் கடந்த 13-4-89 அன்று 38 பேரைப் பலி கொண்ட, 55 பேரைப் படுகாயப்படுத்திய, 5 கடைகளைத் தரைமட்டமாக்கிய குண்டு வெடிப்புச் சம்பவமாகும். இச் சம்பவத்தையடுத்து ஏற்பட்ட கலவரத்தில் 11 தமிழ்ப் பெண்கள் வெட்டப்பட்ட நிலையில் திருகோணமலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மேலும் 29 தமிழர்கள் காணாமல் போய்விட்டனர். இது போன்றே கிண்ணியாவில் முஸ்லீம்களைத் தாக்கித் தமிழர்கள் மீது பழிபோட்டு முஸ்லீம் - தமிழர் கலவரங்களை உருவாக்கும் முயற்சியிலும் இந்தியப்படை இறங்கியிருக்கிறது.

—உதயன் 14-4-89
—வீரகேசரி 17-4-89

**17 வயதுப் பெண் இந்திய அமைதிப்படையால் கடத்தல்**

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தர்மபுரம் என்னும் இடத்தில் 20-3-89 அன்று ஜீவராணி என்னும் 17 வயது மாணவி இந்தியப்படையினராலும், துரோகக்கும்பல்களில் ஒன்றான ஈ.என்.டி.எல்.எப். இனராலும் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். கடத்திச் செல்லப்பட்ட மாணவி இன்னும் விடுவிக்கப்படாததால் அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

**மகனைப் பாதுகாக்கச் சென்ற தந்தை இனத்துரோகிகளால் சுட்டுக் கொலை**

முல்லைத்தீவு மாவட்டம் கள்ளப்பாடு என்னும் இடத்தில் 5-4-89 அன்று குடிபோதையில் இருந்த டெலோ இனத்துரோகக் கும்பல் 14 வயது மாணவன் ஒருவனைக் கண்மூடித்தனமாகத் தாக்கியது. அதைத் தடுக்க முயன்ற அந்த மாணவனின் தந்தையை அக் கும்பல் சுட்டுக் கொன்றுள்ளது. இச்சம்பவங்கள் யாவும் இந்திய அமைதிகாப்புப் படையின் அனுசரணையுடனேயே நடைபெற்றன.

**முஸ்லீம்கள் மீது இந்தியப்படை வெறியாட்டம்**

திருகோணமலை மாவட்டம் குறிஞ்சாக்கேணி என்னும் இடத்தில் 11-4-89 அன்று பல முஸ்லீம் பெண்கள் இந்திய இராணுவத்தால் கற்பழிக்கப்பட்டு அதன் பின் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு பெண்ணின் மூன்று குழந்தைகளும் கூட இந்தியப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

10-ந் தேதியிலிருந்து 16-ந் தேதிவரையிலான ஒரு வார காலத்துக்குள் 20-க்கும் மேற்பட்ட முஸ்லீம்கள் இந்தியப் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். தாக்குதல் நடைபெற்ற இடங்களிலிருந்து 3303 முஸ்லீம் குடும்பங்கள் கிண்ணியா, ஆயிலிப்பு, வானாறு போன்ற இடங்களுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். அங்கும் ஒரு வார காலமாக ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து உள்ளதால் அப் பகுதியில் பட்டினிச்சாவு அபாயம் ஏற்பட்டுள்ளது. கிண்ணியாவில் பல முஸ்லீம்களின் வீடுகளையும், கடைகளையும் இந்தியப்படையினர் எரித்துள்ளனர். இவற்றுக்கு இந்திய அரசின் கைக்கூலிகளாகச் செயற்படும் மாகாணசபைப் பிரதிநிதிகளும் துணை போகின்றார்கள்.

www.tamilarangam.net



**ஆக்கிரமிப்புப் படையும், ஐந்தாம்படையும் கூட்டுச் சதி**

திருகோணமலையில் கடந்த 13-4-89 அன்று இந்திய ஆக்கிரமிப்புப் படை தனது ஐந்தாம்படையின் துணையுடன் பாரிய குண்டு வெடிப்பு ஒன்றை நிகழ்த்தியுள்ளது. இக்குண்டு வெடிப்பில் 38 பேர் பலியாயினர்.

தமிழீழத்தில் தொடர்ந்து குழப்பம் நிலவ வேண்டும் என்பதில் இந்திய அரசு அக்கறையாக இருக்கிறது. இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராட இன்று தமிழ் மக்களும், சிங்கள மக்களும் ஒன்று திரளக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. அதைத் தடுப்பதற்காகவே இந்தியப் படையினர் இந்தக் கீழ்த்தரமான செயலில் இறங்கியிருக்கின்றனர்.

**இளம்பெண்களைக் கடத்த ஒத்துழைக்காததால் பேருந்து சாரதியை ஈ. பி. ஆர். எல். எப். கும்பல் சுட்டுக் கொன்றது**

6-4-89 அன்று ஆனையிறவு தடுப்பு முகாமில் இந்தியப் படையினருடன் பிரயாணிகள் பேருந்தை சோதனையிட்ட ஈ. பி. ஆர். எல். எப். குழுவினர் அப்பேருந்தில் இருந்த 2 இளம் பெண்களை பலாலி இந்தியப்படை இராணுவமுகாமில் ஒப்படைக்கும்படி பேருந்து சாரதியைப் பணித்தனர். அதற்கு உடன்படாத பேருந்து சாரதி அந்த இரு இளம் பெண்களையும் இடையிலேயே பாதுகாப்பான இடத்தில் இறக்கி அப்பெண்களைக் காப்பாற்றினார்.

இதனால் ஆத்திரமுற்ற வடபகுதியில் போட்டியின்றி வெற்றிபெற்றதாகக் கூறிக் கொள்ளும் கும்பல் மிருசுவில் என்னும் இடத்தில் உள்ள அப்பேருந்து சாரதியின் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து அவரை மிருகத்தனமாகச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

**சிறுமிகளைக் கற்பழித்த இந்தியப்படை**

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு இராணுவ முகாமில் காவலுக்கு நின்ற இரு இந்தியப் படையினர் அப்பகுதியில் உள்ள வீதியில் சென்ற சிதம்பரம் மதிவதனி (13-வயது), சிதம்பரப்பிள்ளை யோகேஸ்வரி (12-வயது) ஆகிய இரு சிறுமியரையும் முகாமுக்குள் இழுத்துச் சென்று கற்பழித்துள்ளனர். பாதிக்கப்பட்ட இரு சிறுமியரும் மருத்துவப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**மீனவர்கள் மீது இந்தியப்படை நடத்திய விமானத்தாக்குதல்**

முல்லைத்தீவு மாவட்டம் தங்கபுரம் என்னும் மீன்பிடிக் கிராமத்தின்மீதும், கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த 75-க்கும் அதிகமான மீனவர்கள் மீதும் 20-4-89 அன்று இந்தியப்படையினர் ஹெலிகாப்டர்களின் மூலம் செல் தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டதில் தம்பிராஜா தயாநிதி என்ற பெண் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

அத்தாக்குதலுக்குத் தப்பிச் செல்ல முயன்றவர்கள் மீது அலம்பில் இராணுவ முகாமிலிருந்து புறப்பட்டு வந்த இந்தியப் படையினர் கடுமையான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் வெளியே தெரியவில்லை.

**சிங்களப் படையினர் கண்ணிவெடித் தாக்குதலுக்கு 2 முஸ்லீம்கள் பலி**

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள புல்மோட்டை என்னும் கிராமத்தில் சிறீலங்கா படையினர் வைத்த நிலக்கண்ணியில் சிக்கி நைனாமுகம்மது குஞ்சன் (26-வயது) லுருகில் இஸ்மாயில் (24-வயது) ஆகிய இரண்டு முஸ்லீம் இளைஞர்கள் பலியாயினர்! மேலும் அகமத்கான், ஜெபர்கான் ஆகிய இருவர் தமது கால்களை இழந்துள்ளனர்.

**துரோகப் படைகளால் முஸ்லீம்களின் கடைகள் தீக்கிரை**

கிழக்கு மாகாணத்திலுள்ள கல்முனையில் சலீல் என்னும் அப்பாவி முஸ்லீம் இளைஞனைக் கடத்திய ஈ. என். டி. எல். எப். துரோகக் கும்பலுக்கு பதிலடியாக ஈ. என். டி. எல். எப். உறுப்பினர் ஒருவரை முஸ்லீம் மக்கள் கடத்திச் சென்றனர். இதைத் தொடர்ந்து முஸ்லீம் மக்களுக்குச் சொந்தமான 6 கடைகளை ஈ. என். டி. எல் எப். துரோகக் கும்பல் எரித்து முற்றாக நாசப்படுத்தியுள்ளது.

**இந்தியப்படை நடவடிக்கைகளால் பொதுமக்கள் அல்லல்**

ஒரு மாத காலமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய அமைதிப் படையினர் பெருமளவிலான இராணுவ நடவடிக்கைக்ளை மேற்கொண்டு வரும் பகுதிகளில் மக்கள் பெரும் அல்லல்களை அனுபவித்து வருகின்றார்கள்.

பொதுமக்களில் பலர் கடுமையான வியாதிகளுக்கு உள்ளாகி இருக்கின்றனர். இருந்த போதிலும் அங்கு வைத்திய வசதிகள் இல்லை.

அலம்பிலுக்கு அப்பால் போவதற்கு அரசாங்க அதிகாரிகளுக்குக் கூட அனுமதி வழங்கப்படவில்லை. அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் போதியளவு நிவாரணம் கிடைக்கவில்லை.

—உதயன் 27-3-89

www.tamilarangam.net



**மீனவர் மீது சிங்களப்படை தாக்குதல்**

வடபகுதியில் உள்ள காரைநகர் கடலில் வைத்து மீனவர்கள் மீது இலங்கைக் கடற் படையினர் தாக்குதல் நடத்தி படுகாயம் விளைவித்துள்ளனர். இத் தாக்குதலின்போது மயிலிட்டியைச் சேர்ந்த பழநி அருமைராஜா என்பவர் கை முறிந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

—உதயன் 27-3-89

**இந்தியப் படையின் செல் தாக்குதலில் 83 வயது முதியவர் படுகாயம்**

3-4-89 அன்று அலம்பில் பகுதியில் இந்தியப் படையினர் நடத்திய செல் தாக்குத லின்போது அலம்பில் நாகலிங்கம் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி மருதலிங்கம் என்ற 83 வயது முதியவர் முதுகில் பலத்த காய மடைந்தார்.

வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபோதே இரவு 8 மணியளவில் அவரை செல் தாக்கியது.

—உதயன் 5-4-89

**விடுதலைப் புலி ஆதரவாளர் சுட்டுக் கொலை**

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தின் இருபாலைக் கிளை முகாமையாளரான சந்திரன் என்றழைக்கப்படும் செல்லையா தவலோகநாதன் (40 வயது) 31-3-89 அன்று மாலை கல்வியங்காடு ராசவீதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப் பட்டார்.

கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளராவார்.

—உதயன் 1-4-89

**இந்தியப்படை ஆக்கிரமிப்பினால் மருத்துவமனை மூடப்பட்டது**

மாங்குளத்தை அடுத்துள்ள ஒலுமடு ஆயுள்வேத வைத்தியசாலை - இந்தியப்படை யினர் ஆக்கிரமித்ததனால் மூடப்பட்டுள்ளது. மேற்படி வைத்தியசாலை இந்தியப்படை முகாமாக ஆக்கப்பட்டதைத் தொடர்ந்து இங்கு கடமையாற்றிய அதிகாரி ஒட்டுசுட்டான் ஆயுள்வேத வைத்திய நிலையத்துக்கு மாற்றப் பட்டுள்ளார்.

—வீரகேசரி 4-4-89

**இந்தியப்படை தாக்குதலில் இருவர் மருத்துவமனையில் அனுமதி**

வடமராட்சியைச் சேர்ந்த நெல்லியடி மாலிசந்தியில் இந்தியப் படையினர் நடத்திய தாக்குதலில் எஸ். சண்முகராசா (வயது 24) ரி. நவரத்தினம் (வயது 30) ஆகியோர் படுகாய முற்று மந்திகை மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

உதயன் 10-4-89

**இந்தியப்படை துப்பாக்கிச் சூட்டில் 3 பிள்ளைகளின் தந்தை படுகாயம்**

யாழ் திருநெல்வேலியில் பல்கலைக் கழகத் துக்கு முன்பாக உள்ள குமாரசாமி வீதியில் 10-4-89 மாலை 6 மணியளவில் இந்தியப்படை யினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் கொக்குவில் கருக்காய் லேனைச் சேர்ந்த ஆறுமுகம் மயில்வாகனம் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை படுகாய மடைந்துள்ளார்.

உதயன் 11-4-89

**இந்தியப்படையின் தடையால் பொதுமக்கள் நிவாரணமின்றித் தவிப்பு**

1984-ம் ஆண்டு டிசம்பர் முதல் அகதி களாக்கப்பட்ட கொக்கிளாய், கருநாட்டுக் கேணி, கொக்குத்தொடுவாய் ஆகிய பகுதி மக்கள் குமுழமுனை, அலம்பில் செம்மலை ஆகிய பகுதிகளில் வந்து குடியிருக்கின்றனர்.

இந்தியப் படையினரின் கெடுபிடிகளினால் இவர்களுக்கு கடந்த மூன்று மாதங்களாக மாதாந்த நிவாரணப் பொருட்கள் கிடைக்க வில்லை. முல்லைத்தீவில் இருந்து குமுழமுனை, அலம்பில், செம்மலைப் பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருட்கள் எடுத்துச் செல்வதற்கு இந்தியப்படை விதித் திருக்கும் கடும் தடை காரணமாகவே இவர் களுக்கு நிவாரணப் பொருட்கள் கிடைக்காது பட்டினியை எதிர்நோக்கும் நிலை ஏற்பட் டுள்ளது.

—உதயன் 20-4-89

**விசாரணைக்கு அழைத்துச் சென்றவரை பிணமாக்கியது இந்தியப்படை**

மட்டக்களப்பு மாவட்டம் கட்டுமுறிவு என்ற கிராமத்தைச் சேர்ந்த பத்தக்குட்டி மரகதம் (40 வயது) என்பவரை இந்தியப் படையினர் விசாரணைக்கு என அழைத்துச் சென்று அடித்துத் துன்புறுத்தி சித்திரவதைகள் செய்துவிட்டு 3 நாட்களின் பின் மதில்சுவர் ஒன்றை உடைத்து அவர் மேல் வீழ்த்திக் கொன்றுள்ளனர்.

—உதயன் 20-4-89

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அயர்லாந்து மண்ணில்

பிரிட்டிஷ் படை வீரனுக்கு ஒரு கடிதம்

# அந்நியப் படை வீரனே!



படை வீரனே!
இங்கு வரவேண்டும் என்று நீ யாரையும் கேட்கவில்லை
அது எங்களுக்குத் தெரியும்.

நீ ஆணைகளுக்கு அடிபணிகிறாய்
அது எங்களுக்குத் தெரியும்.

உனக்கு ஒரு மனைவி
ஒரு காதலி
ஒரு தாய் உண்டு
அது எங்களுக்குத் தெரியும்.
உனக்குக் குழந்தைகள் உண்டு
அதுவும் எங்களுக்குத் தெரியும்.

ஆனால் படை வீரனே!
எங்கு நீ நிற்கிறாயோ
அங்கே உனக்கு மரணம் நிச்சயம்.
எங்கு நீ நடக்கிறாயோ
அங்கே ஏற்படும் உனக்கொரு எரிகின்ற காயம்.
எங்கு நீ உறங்குகிறாயோ
அங்கு உனக்கு அமைதியே இல்லை.
ரத்தவெள்ளத் தீய கனவினூடே
விம்மித் தணிகிறது பூமி.
படை வீரனே!
நீ மடிந்தால்
நாய்கள்தான் உன்னைப் புதைக்கும்.

இந்த மண்ணிற்கு நீ வந்தபோது
புரிந்துகொள்ள வந்ததாகக் கூறினாய் நீ.
படை வீரனே, உனது புரிதல் எங்களுக்கு சலிப்பூட்டியிருக்கிறது.
ஐரிஷ் மண்ணில் உள்ள பிரிட்டிஷ் துருப்புகளும்
கதவுகளை நீங்கள் தட்டுவதும்
தலைகளில் இடிக்கும் துப்பாக்கிக் கட்டையும்
சிறைகளும் விஷவாயுவும்
இருண்ட மூலைகளில் எங்கள் மீது விழும் அடி உதைகளும்
எங்களுக்கு சலிப்பூட்டியிருக்கின்றன.

படை வீரனே!
ஐரிஷ் மக்களின் எலும்புகளுக்கு
நீ கொண்டுவரும் சமாதானம்

www.tamilarangam.net

எங்களுக்கு சலிப்பூட்டியிருக்கிறது.
எங்கள் இல்லங்களில் வெடிக்கும் குண்டுகள்
தெருக்களில் குவிந்துவரும் இடிபாடுகள்
நெடுங்கால நண்பர்களின் மரணங்கள்
கண்ணீர்கள், ஈமச்சடங்குகள்
முடிவேயில்லாத ஈமச்சடங்குகள்
எங்களுக்கு சலிப்பூட்டியுள்ளன.

படை வீரனே!
இந்த மண்ணிற்கு நீ வந்தபோது
புரிந்துகொள்ள வந்ததாகக் கூறினாய்.
இதுதானா உன் புரிதல்?

நாங்கள் இங்கு கனவு காண்கிறோம்.
இந்தப் பூமி எங்கள் பூமி எனக்
கனவு காண்கிறோம்.
கத்தோலிக்கரும் புராடஸ்டண்டுகளும்
ஆத்திகரும் நாத்திகரும்
ஒருநாள் இங்கு கூடி
ஐரிஷ் ஆண்களாய் ஐரிஷ் பெண்களாய்
கனவு காண்பர்.
மரணமே இல்லாத
பசுமையானதொரு பூமியை
இறங்கிவரும் ஒரு நிசப்தத்தை
சமாதானம் என்றொரு நிசப்தத்தை
நாங்கள் கனவு காண்கிறோம்.

இந்தக் கனவை நாங்கள் காண்பதற்கு
படை வீரனே!
நீ வேண்டியதில்லை.
அதுதான் எங்களது புரிதல்.

வீட்டுக்குப் போ படை வீரனே!
நீ இங்கிருப்பது
காற்றை நாசப்படுத்துகிறது.
உனது புன்முறுவல்
எங்களை அலங்கோலப்படுத்துகிறது.

வீட்டுக்குப் போ படை வீரனே!
உன்னைப் பிணமாக நாங்கள்
உன் வீட்டுக்கு அனுப்புவதற்கு முன்.

ஆங்கிலம் மூலம்: **பேட்ரிக் கால்வின்**

தமிழில்: **எஸ். வி. ராஜதுரை**

www.tamilarangam.net




**2-4-89:** மாலை 6-45 மணியளவில் வடமராட்சியைச் சேர்ந்த வல்வெட்டித்துறை நெடியகாடு சிறுவர் பூங்காவுக்கு அருகில் உடுப்பிட்டியூடாக பொலிகண்டி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்தியப் படையினரை எதிர்கொண்டு விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர். 45 நிமிடங்களுக்கு மேலாக நடைபெற்ற இச்சண்டையில் இந்தியப் படை தரப்பில் ஏற்பட்ட இழப்புக்கள்பற்றி முழுமையாக அறிய முடியவில்லை. எனினும் காயமுற்ற பல இந்தியப் படையினர் வல்வை இந்திராணி மருத்துவமனையில் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு அங்கிருந்து புலோலி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

**2-4-89:** யாழ் மாவட்டம் உடுப்பிட்டியில் தேடுதல் வேட்டைக்கு இரண்டு ஜீப் வண்டிகளில் சென்று கொண்டிருந்த இந்தியப் படையினரை இடைமறித்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட நேரடித் தாக்குதலில் இரண்டு இந்தியப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் நான்கு பேர் படுகாயமடைந்தனர். விடுதலைப் புலிகளுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கட்டைபறிச்சான் என்னும் இடத்திலிருந்து வேறோரிடத்துக்குச் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது மறைந்திருந்து இந்திய இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் காப்டன் சத்தியன் வீரமரணம் அடைந்தார். மேற்கொண்டு கடுமையான சண்டை நடைபெற்றது. இந்தியப்படையின் சேத விபரம் அறிய முடியவில்லை.

**4-4-89:** யாழ் நகரில் இந்தியப் படையினரால் பயிற்றுவிக்கப்பட்ட மக்கள் தொண்டர் படை (C. V. F.) யினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட நேரடி மோதல் ஒரு மணி நேரத்துக்கு நீடித்தது. இந்தச் சண்டையில் ஐந்து மக்கள் தொண்டர் படையினர் கொல்லப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டம் மூதூர் பகுதியில் ஈச்சிலம்பத்தை என்ற இடத்தில் விடுதலைப் புலிகள் நடந்து சென்ற சமயம் இந்தியப்படையினரும், ஈ. பி. ஆர். எல். எப். இனரும் மறைந்திருந்து திடீர் தாக்குதலை மேற்கொண்டனர். அதனையடுத்து இருதரப்பினருக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றது.



**5-4-89:** முல்லைத்தீவு மாவட்டம் குமிழமுனையிலுள்ள இந்தியப்படையினரின் முகாமிலிருந்து புறப்பட்ட இந்தியப் படை கெலிகாப்டர் மீது விடுதலைப் புலிகள் நவீன ஆயுதங்கள் கொண்டு கடும் தாக்குதலை மேற்கொண்டனர். அதையடுத்து அந்த கெலிகாப்டர் அவசர அவசரமாக அலம்பில் இராணுவ முகாமில் தரையிறக்கப்பட்டது. மேலதிக விபரம் அறிய முடியவில்லை.

**6-4-89:** காலை 7-30 மணியளவில் மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து தேடியழிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு ஒலுமடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்தியப் படையினரை முகாமுக்கு ஒரு கிலோமீட்டர் தூரத்தில் தடுத்து நிறுத்திய விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலை மேற்கொண்டனர். 45 நிமிடங்கள் வரை நடைபெற்ற இச்சண்டையில் இரண்டு உயர் அதிகாரிகள் உட்பட 28 இந்தியப்படையினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் தப்பியோடினர்.

www.tamilarangam.net





களத்தில் வெற்றிவாகை சூடிய விடுதலைப் புலி வீரர்கள் மகிழ்ச்சியுடன் நிற்கும் காட்சி.

அவர்களிடமிருந்து சக்தி வாய்ந்த தொலைத்தொடர்புக் கருவிகள் இரண்டு, பிரென் எல். எம். ஜி. இரண்டு தானியங்கி எஸ். எல். ஆர். ஒன்று, சாதாரண எஸ். எல். ஆர். பன்னிரண்டு, எஸ். எம். ஜி. நான்கு, தலைக்கவசம் பதின்நான்கு, எஸ். எல். ஆர். ரவைக் கூட்டுக்கான உறை நான்கு, எஸ். எல். ஆர். ரவைக்கூடு முப்பது, பிறென் எல். எம். ஜி. ரவைக்கூடு பத்து, டி. என். டி. ரக எறிகுண்டுகள் எட்டு, 60-எம். எம். மோட்டார் செல்கள் ஐந்து, 9 எம். எம். ரவைகள் 262, துப்பாக்கிமுனையில் பொருத்தும் கத்தி இரண்டு, தோளில் மாட்டும் பைகள் ஆறு, இடைப்பட்டி ஒன்பது என்பவற்றை விடுதலைப் புலிகள் தமக்கு எதுவித இழப்புமின்றி கைப்பற்றினர்.

அதே நேரம் மற்றொரு முகாமிலிருந்து உதவிக்கு வந்த இந்தியப் படையினரை விடுதலைப் புலிகளின் மற்றொரு பிரிவு இடையிலேயே தடுத்து நிறுத்தி எதிர்த் தாக்குதலை மேற்கொண்டது.

**12-4-89 :** வவுனியா மாவட்டத்திலுள்ள பூம்புகார் என்னும் இடத்தில் தேடுதல் வேட்டைக்குப் புறப்பட்ட இந்தியப் படையினரைத் தடுத்து நிறுத்தி விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலை மேற்கொண்டனர். நீண்டநேரமாக நடைபெற்ற இச்சண்டையில் 10 இந்தியப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதுடன் மேலும் 7 இந்தியப் படையினர் படுகாயமடைந்தனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் சண்முகம், சுதா ஆகிய வீரர்கள் வீரமரணமடைந்தனர்.

**14-4-89 :** யாழ் மாவட்டம் கந்தர்மடம் ஆலடிச் சந்தியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தினால் விடுதலைப் புலிகளின் வலிகாமம் பகுதிப் பொறுப்பாளர் மேஜர் சுபாஸ், காப்டன் சிறீ, லெப்டினண்ட் அல்பேட், லெப்டினண்ட் கரன் ஆகிய வீரர்கள் உட்பட சில பொதுமக்களும் உயிரிழந்தனர்.

**15-4-89 :** தமிழ்ப் பகுதியின் மணலாற்றில் சிங்களக் குடியேற்றத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்த சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பெருந் தாக்குதலின்போது 21 சிறீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ரீ-56 ரக ரைபிள்கள் பதினான்கு, ரீ 81 ரக ரைபிள் ஒன்று, மோட்டார் துப்பாக்கிகள் பத்தொன்பது, ரவைக்கூடுகள் 60, ரவைகள் 1525, தொலைத் தொடர்பு வாக்கிடோக்கி ஒன்று எறிகுண்டு ஒன்று என்பவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 2-வது லெப்டினண்ட் வீரர்களான கரன், குணம் ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

**20-4-89 :** யாழ் மாவட்டம் சுழிபுரம் என்ற இடத்தில் விடுதலைப் புலிகள் இருந்த வீட்டைத் துரோகிகளின் உதவியுடன் சுற்றி வளைத்து இந்தியப் படையினர் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். அங்கிருந்த வீரர்களான இன்பம் மாஸ்டர், நெல்சன், சாரீல் ஆகியோர் தம்மிடமிருந்த ஆயுதங்களுக்கான ரவைகள் தீரும் வரை போராடி வீரமரணமடைந்தனர்.

அன்று இரவு மட்டக்களப்புக்கும் பொலன் நறுவைக்கும் இடையில் உள்ள மாதுரு ஓயாப் பகுதியான தொப்பியாகல என்னும் இடத்தில் இந்தியப்படையினர் விடுதலைப் புலிகள்மீது தாக்குதலை மேற்கொள்ள முயற்சித்த வேளையில் விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப்படையினருக்கும் இடையில் ஏற்பட்ட கடுமையான மோதலில் இந்தியப் படையின் படையணித் தலைவர் (Battalian Commander) ஒருவரும்,

லெப்டினண்ட் கேர்ணல் ஒருவரும், பல ஜவான்களும் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த படையணித் தலைவரும், லெப்டினண்ட் கேர்ணலும் வைத்திய சிகிச்சைக்காக உடனடியாக சென்னைக்கு விமானமூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

**28-4-89:** காலை 10 மணியளவில் கிளிநொச்சி 154ம் கட்டை செல்வபுரம் என்னும் இடத்தில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்தியப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடுமையான சண்டை மூண்டது. அச் சண்டையின்போது இரண்டு இந்தியப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் ஒருவர் படுகாயம் அடைந்தார். விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

**30-4-89:** காலை 9-15 மணியளவில் யாழ் மாவட்டம் திருநெல்வேலி மணல்தரை ஒழுங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இந்தியப் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற கடுமையான சண்டையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த காப்டன் வரதப்பா (சுரேஸ்குமார்) சயனைட் அருந்தி வீரமரணமடைந்தார்.


அன்று மாலை 3-15 மணியளவில் யாழ் மாவட்டம் கோண்டாவில் பகுதியிலும் விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்குமிடையில் கடுமையான மோதல் இடம்பெற்றது. சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் நீண்ட நேரத்துக்கு இடம்பெற்றது.

அன்று நீர்வேலி இராஜவீதியில் இந்தியப் படையின் சுற்றிவளைப்பை அடுத்து நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஜெயராஜா ஜெகன் (வயது 22) என்ற வீரர் சயனைட் அருந்தி வீரமரணமடைந்தார்.

★

# தமிழீழத்தில் தாண்டவமாடும் கொலை வெறித்தனம்

இந்தியப் படையினதும், துரோகப்படையான ஈ.பி.ஆர்.எல்.எப். கும்பலினதும் கொலைவெறித் தாண்டவத்தைப்பற்றி சாவகச்சேரி மக்கள் குழுத் தலைவர் வழக்கறிஞர் வீ. ராஜசங்கரி அவர்கள் தமிழகத்திலுள்ள உறவினரொருவருக்கு கடிதம் எழுதிய இரண்டாவது நாள் அந்தக் கொலை வெறித்தனத்துக்கு அவரும் பலியானார். ராஜசங்கரி எழுதிய கடிதத்தின் புகைப்படக் கட்டையும், தமிழாக்கமும் கீழே தரப்பட்டுள்ளன.


boxes (there will be a shower ... on the ... box)
and a bottle or tin of pickles when you return.
E.P.R.L.F. is now about most of the places with the shielding of the I.P.K.F. The Commanding officer of Chava says that all leading intelligentsia, advisers and strong supporters will be bumped off soon. C.V.K. is in protective custody. S'Sundaram's affair is the beginning I think.
All of us are quite o.k here.
If possible tell Mally to buy a good blue Kanjipuram saree of the latest model with blouse piece.
How are you spending your time. I think with the Presidential polls — something serious might take place. In the south people are getting killed and murdered ruthlessly
Convey our wishes to Mally and Purnima.
Yours affly
V. Rajasangary

V. Rajasangary
Attorney At Law
&
Notary public
CHAVAKACHCHERI

சாவகச்சேரி
சிறீலங்கா
24-10-88

.........ஈ. ம. பு. வி. மு. ஆட்கள் (E. P. R. L, F.) - இப்போது இந்திய அமைதிப் படையின் பாதுகாப்போடு எல்லா இடங்களிலுமே காணப்படுகிறார்கள். இப்படையின் சாவகச்சேரி தளபதி, 'அறிவாளிகள் - ஆலோசகர்கள் - ஆதரவாளர்களில் முக்கியமானவர்கள் விரைவில் படுகொலை செய்யப்படுவார்கள் என்று கூறி இருக்கிறார். C. V. K. (யாழ் மாநகராட்சி ஆணையாளர் சிவஞானம்) அவர்கள் ஏதோ பாதுகாப்புடன் இருக்கிறார்; சிவானந்தசுந்தரத்தின் விடயம் ஒரு தொடக்கம் என்றே கருதுகிறேன். நாங்கள் நலம்.

உங்கள்
அன்புள்ள,
**வீ. ராஜசங்கரி**

www.tamilarangam.net

# "இந்தியப்படையே வெளியேறு!"

அமைதியை ஏற்படுத்த என்று அனுப்பப்பட்டு இன்று அமளியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இந்தியப்படை தமிழீழத்தை விட்டு வெளியேறவேண்டும் என்று ஈழத் தமிழ் மக்கள் நீண்டகாலமாகவே குரல் கொடுத்து வருகின்றனர்.

இன்று அந்தக் கோரிக்கைக்கு ஆதரவாகத் தமிழீழத்துக்கு வெளியே சிங்கள மக்களும் குரல் கொடுத்து வருகின்றனர்.

''இந்தியப்படையின் செயல் நியாயமற்றது', உடனடியாகத் தமிழ்ப்பகுதியை விட்டு வெளியேறவேண்டும்'' என்று உலக அரங்கிலிருந்து பத்திரிகையாளர்களும், அறிஞர்களும் கூடக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

**அமைதிப்படை இலங்கையில் இருப்பதை இந்திய மக்கள்கூட விரும்பவில்லை**

சென்னைத் துறைமுகத்தில்- ஏப்ரல் 27-இல் இரண்டு இந்திய அமைதிப்படைப் பிரிவு களைச் சிறீலங்காவின் திரு கோணமலைத் துறைமுகத்தி லிருந்து ஏற்றிவந்த கப்பல் கரை தட்டியது. சிறீலங்காவுக்கு முதன்முதலாக அனுப்பப்பட்ட 1-வது பரா துருப்புக்களே கப்பலிலிருந்து முதல் பிரிவாக இறங்கினார்கள். நிலக் கண்ணிகள் - பொறிகள் நிரம் பிய வவுனியாக் காடுகளில் 22 கொடுமையான மாதங்களைக் கழித்துவிட்டு இவர்கள் திரும்பு கிறார்கள். மேளதாளங்கள் - வாத்தியங்கள் இல்லாமலே திரும்பி வருகிறார்கள்.

கட்டிடங்கள் - பாரம்தூக்கி களின் நிழலில் கூட்டம் கூட்ட மாக ஜவான்கள் உட்கார்ந் திருந்தார்கள். மரணத்தையும் - காயங்களையும் - விதவைகளை யுமே தந்த - வெற்றிபெற முடி யாத ஒரு போரிலிருந்து திரும் பியதால் அவர்கள் களைத்துப் போய் இருந்தார்கள்.

வெற்றி வீரர்களாக அல்ல - களைத்துப்போன ஒரு கூட்ட மாகவே அவர்களைக் காண முடிந்தது.

48,000 துருப்புக்களும் - ஹெலிகொப்டர்களும் போர் விமானங்களும் - கிழக்குக் கடற் படைப் பிரிவும் இப்போரில் ஈடுபட்டும் தமிழர்களின் மாநில மான வடகிழக்குப் பகுதியை இந்திய அமைதிப்படையின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் திருப்திகரமான முறையில் கொண்டுவர இயலவில்லை. சிறீலங்கா தமிழர்களின் துரோ கத்தனமான அரசியலும் - ஈரலிப்பான காடுகளும் - அடக்கமுடியாத விடுதலைப் புலிகளின் எதிர்ப்பும் - இந்தியா வின் சிறீலங்கா மீதான கொள் கையின் பிழையான கணிப்பும் - இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து இந்திய அமைதிப்படை யைச் சங்கடமான நிலைமைக் குள் தள்ளிவிட்டன என்றே சொல்லவேண்டும். தமிழர் களைக் காப்பாற்ற அனுப்பப் பட்ட இப்படை தமிழர்களின் பேராதரவுள்ள கெரில்லாக்களு டன் மோதவேண்டியதாயிற்று.

''இன்று இலங்கை அரசும் எங்களை வேண்டாம் என்று கூறுகிறது. இலங்கை மக்களின் பெரும்பான்மை யானவர்களும் எங்களுக்கு எதிராகவே உள்ளனர். ஏன் நமது சொந்த இந்திய மக்களே நாங்கள் சிறீலங்காவில் இருப்பதை விரும்பவில்லை. பின் எதற்காக நாங்கள் அங்கே இருக்கவேண் டும்?'' என்று சிறீலங்காவில் இருந்து நாடு திரும்பியுள்ள ஒரு இந்தியப்படை மேஜர் கூறினார்.

எல்.ரி.ரி.ஈ. கெரில்லாக்களால் அன்றாடம் இந்தியப்படை வீரர்கள் கொல்லப்படுவதாக வரும் சேதிகளும் - இராணுவ


www.tamilarangam.net



மருத்துவ நிலையங்களுக்கு காயமடைந்த இந்தியப்படை வீரர்கள் அடிக்கடி கொண்டு வரப்படுவதும் இந்திய அரசுக்கு இக்களத்தில் ஏற்பட்டுள்ள வெற்றியை அல்ல - இராணுவத் தோல்வியையே காட்டுகிறது.

வவுனியா காடுகளில் அண்மையில் நடந்த பல சண்டைகளும்- ஏனைய நகர்ப்புறங்களில் விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட மரணக் கிடங்குகளின் விளைவுகளும் - அமெரிக்கப் படைகளுக்கு வியட்நாம் ஏற்படுத்திய அச்சத்தை விடக் கூடிய அச்சத்தையே இந்திய அமைதிப்படைக்கு விளைவித்துள்ளன.

INDRANIL BANERJIE
Sunday 14—20 May 1989




INDIAN ABROAD பத்திரிகையின் தீர்க்கதரிசனம், 16-10 87

## விடுதலைப் புலிகளின் பலமும் ஆற்றலும் அதிகரித்துள்ளன

'புலிகளின் முதுகெலும்பை உடைத்துவிட்டோம்' என்று இந்திய அமைதிப்படை அடிக்கடி சொல்லிவருகிறது. ஆனால் இது முழு அளவில் உண்மை அல்ல. பிரபாகரன் இந்தியப் படைகளினால் பிடிக்கப்பட முடியாதவராக நழுவிக் கொண்டே இருக்கிறார். விடுதலைப் புலிகளிடம் படை வீரர் பற்றாக்குறையும் இல்லை. அதுமட்டுமல்ல தாக்குகின்ற - அழிக்கின்ற ஆற்றலும் முன்பிருந்ததைவிட அவர்களிடம் இப்போது கூடியே இருக்கிறது,

DILIP BOBB
INDIA TODAY
May 15 1989

## தமிழீழத்தில் இந்தியா நடத்திய ''மார்சல் லோ''

இந்திய அமைதிப்படைக்கு ஒரே ஒரு பணிதான் கொடுக்கப்பட்டது. ''தமிழ்ப்புலி' என்று யாரைக் கருதினாலும் அவரைச் சுட்டுக் கொல்'' இது சிறீலங்காவில் இந்தியா அமுல்நடத்தும் 'மார்சல்லோ' தான். இதன் விளைவு? அந்தத் தீவில் இந்தியாவுக்கு இருந்த ஒரே நண்பர்களான தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் - பதிலடியாக பல்லாயிரம் இந்திய ஜவான்களும் புதைகுழிக்கு அனுப்பப்பட்டார்கள். இந்திய - சிறீலங்கா அரசியல் அமைப்போ அல்லது - உலகின் எந்தச் சட்டங்களோ இந்தக் கொடுமையை 'ஓர் அமைதி நடவடிக்கை' என்று ஒருபோதும் ஒப்புக்கொள்ள முடியாது.

இன்று - இந்தியாவைக் கைகழுவி விட்டு தானே நேரில் எல். ரி. ரி. ஈ. உடன் பேச்சுவார்த்தை நடத்திவரும் சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா 'வெளிவேறு' என்று இந்தியாவைப்பார்த்துக் கூறப்போகும் 'அவமானம் நிறைந்த காலம்' நெருங்கிக்கொண்டிருக்கிறது.

V. R. KRISHNA IYER
The Hindu
May 16 — 1989

## இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம் தகர்கிறது

சிறீலங்காவில் இந்திய வீரர்கள் நூற்றுக்கணக்கில் மடிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இருந்து தப்புவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. இந்தியா தன் தவறுகளை ஒப்புக்கொண்டு படையைத் திருப்பி அழைக்கவேண்டும். தொடர்ந்தும் மேலதிக பாதிப்புக்கள் ஏற்படாமல் - அமெரிக்கா வியட்நாமிலும் - ரஷ்யா ஆப்கானிஸ்தானிலும் இருந்து வெளியேறியதுபோல் இந்தியாவும் நடந்து கொள்ள வேண்டும்.

ராஜீவ் காந்தியின் ஏனைய ஒப்பந்தங்களைப்போல் இந்திய-சிறீலங்கா ஒப்பந்தமும் இதோ உடைந்து தகர்ந்து கொண்டிருக்கிறது.

ALIVE
May (Second) 1989

## இந்தியப் படையை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்

சிறீலங்காவில் உள்ள இந்திய அமைதிப்படை நிலைகுலைந்து போய் இருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோதும் அளவு உற்சாகம் அற்றவர்களாக அவர்கள் காணப்படு

www.tamilarangam.net



கிறார்கள். எந்த முன்னேற்பாடும் இன்றித் துவக்கப்பட்ட போர் என்பதால் நமது வீரர்களுக்கு இது வழக்கத்துக்கு மாறான ஒரு போராகவே தோன்றுகிறது.

சுதந்திரத்துக்காகப் போராடும் ஒரு கூட்டத்தை எதிர்த்து அவர்கள் சுடவேண்டிய நிலை - இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள ஒரு சகோதரனைச் சுடுவதுபோலத்தான்.

இந்திய அமைதிப்படை அதிகாரிகள், கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் பற்றியும்-பிடிபட்ட கைதிகள் பற்றியும் மிகைப் படுத்திக் கூறி - தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்கிறார்கள். ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடலாம். கடந்த ஆண்டு ஆகஸ்ட்டில் இந்திய அமைதிப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஏ.எஸ். கல்கட் முல்லைத்தீவு நித்திகைக்குளம் காட்டுப்பகுதியில் ஹெலிகொப்டரில் இறங்கினார். அந்த இடத்தில் இந்தியப்படைக் காவலையும் மீறி விடுதலைப் புலிகள் தரையில் இருந்த இரு ஹெலிகொப்டர்களைச் சுட்டு உடைத்து நொறுக்கினார்கள். ஒன்று கல்கட் அவர்களுடையது. பதுங்கு குழியில் ஓடி ஒளிந்து கல்கட் உயிர் தப்பினார். புலிகள் தங்கள் வேலையை முடித்து விட்டு எந்த உயிரிழப்புமின்றி அமைதியாகத் திரும்பினார்கள். உண்மையில் விடுதலைப் புலிகளுக்குத் தான் 'பதக்கங்கள்' வழங்கிப் பாராட்டியிருக்க வேண்டும். ஆனால் மேஜர் ஜெனரல் கல்கட்டைச் சுற்றி நின்றவர்களே பதக்கமளித்துப் பாராட்டப்பட்டார்கள்.

இத்தகைய 'கேலிக் கூத்துக்களை' ஒவ்வொரு நாளும் பார்க்கும் இந்திய வீரர்கள் தங்கள் அதிகாரிகள் மீது மரியாதை இழந்து போகிறார்கள். ஒவ்வொரு நாளும் வெளியே புறப்படும்போது விடுதலைப் புலிகளின் துப்பாக்கிகளைச் சந்தித்துவிடக் கூடாது என்று கடவுளை வணங்கிவிட்டே புறப்படுகிறார்கள்.

இந்திய அமைதிப் படையை இறைவன் காப்பாற்றுவானாக.

OPINION
(By an IPKF veteran)
India Week
May 26—Jnne 1 1989

## புலிகளுடன் இந்தியப்படை போர் நடத்துவது புரியாத புதிர்

இலங்கை அரசுடன் விடுதலைப் புலிகள் நடத்தி வரும் பேச்சுவார்த்தைகள் அவர்களிடையே உள்ள உண்மைப் பிரச்சினைகளைக் கருதாது இந்தியப் படைக்கு எதிராகச் செய்யப்படும் ஒரு பிரசார உத்தியாக மாறி விட்டது என்று இந்தியத் தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப் பட்டுள்ளது. வட-கிழக்கு மாகாணம் நிரந்தரமாக இணைக்கப்படுதல், மாகாண அரசுக்கு சுயாட்சிதரும் வகையில் அதிகமான அதிகாரங்கள், ஈழப்பகுதிகளில் சிங்களர் குடியேற்றத்தைத் தடுத்தல் ஆகியவையே முக்கியமான பிரச்சினைகள் என்பது உண்மையே. ஆனால் இலங்கையிலிருந்து இந்தியப்படைகள் வெளியேறும் பிரச்சினையும் முக்கியமானதுதானே? பேச்சுவார்த்தைகளில் இருதரப்பினரும் இந்தப் பிரச்சினைக்கு முதலிடம் அளிக்கக்கூடாது என்று எப்படி நாம் சொல்ல முடியும்?

இப் பேச்சுவார்த்தைகளில் இலங்கையின் ஒற்றுமையும் இறையாண்மையும் காக்கப்பட வேண்டும் என்று இந்தியத் தூதுவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். நமது தூதுவரை விட இந்த இரு விஷயங்களில் இலங்கை அதிபர் பிரமதாசாவிற்கு நிச்சயமாக அதிக அக்கறை இருக்கும் என்று நம்பலாம். இலங்கையின் ஒற்றுமையைக் காப்பாற்றுவதற்குத் தானே அவர் எந்த நிபந்தனையுமின்றி விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்? யாருடன் பேச்சுவார்த்தை நடத்தினால் நாட்டின் ஒற்றுமை காக்கப்படும் என்று அவருக்குத் தெரிந்த அளவு இந்திய அரசுக்குத் தெரியுமா என்பது சந்தேகமே. ஏனெனில் எந்தப் புலிகளுடன் இலங்கை அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறதோ அந்தப் புலிகளுடன் அதே சமயத்தில் இந்திய அமைதிப்படை ஒரு கடும் போர் செய்துகொண்டிருப்பது புரியாத வேதனைப் புதிராக இருக்கிறது.

இலங்கையின் ஒற்றுமைப் பிரச்சினைகளை அந்நாட்டின் அரசியல் தலைவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, அந்த நாட்டின் இறையாண்மையை மதிக்கும் வகையில் இந்தியா தன் துருப்புகளை அங்கிருந்து கூடிய விரைவில் விலக்கிக்கொள்வது அனைவருக்கும் திருப்தியளிப்பதாகவும் இருக்கும்; தெற்காசியாவில் சமாதானத்தை நிலை நிறுத்தவும் வழிவகுக்கும்.

—தினமணி தலையங்கம்
(20 - மே - 1989)

✶

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைதிப்படை

# அராஜகத்தின் உச்சக்கட்டம்

ஜனநாயகம் பத்திரிகை சுதந்திரம் என்றெல்லாம் இந்திய அரசும், அதன் எடுபிடிகளான இனத்துரோகக் குழுவினர்களும் ஒருபுறம் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கின்றனர். அதே வேளை தமக்கு எதிரான கருத்துக்கள் வெளிவருவதைத் தடுக்க கொடிய அடக்குமுறைகளைத் தமிழீழத்தில் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது இந்தக் கும்பல்.

இந்தியப் படையினர் தமிழீழத்தில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னரே முன்னெச்சரிக்கையாக தமது அடக்குமுறைகளும், துரோகத்தனங்களும் வெளிவருவதைத் தடுக்க பத்திரிகை அலுவலகங்களையும், தொலைக்காட்சி, வானொலி நிலையங்களையும் முதலில் தாக்கி அழித்தனர்.

இன்று தமிழீழத்தில் தமக்கெதிரான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்த ஒரு வீட்டின் மதிற் சுவரை இந்தியப் படையினர் - அந்த வீட்டின் சொந்தக்காரர்களைக் கொண்டே அச்சுறுத்தி - உடைத்துத் தகர்த்திருக்கின்றனர். அதுபற்றி அந்த வீட்டின் சொந்தக்காரர் தன் அண்ணனுக்கு எழுதிய கடிதத்தின் புகைப்படக் கட்டையும், தமிழாக்கமும் கீழே தரப்பட்டுள்ளன.

... I hope he has not painted a rosy picture just to ensure that the IPKF continues to stay here and murder those who do not see eye to eye with them. Incidently, the IPKF wanted our wall to be broken for the simple reason that somebody had pasted a Hand Bill that 'nobody should vote'.

They have come and bullied my Wife and Son and wanted the area of the Wall where the poster was put up, be broken, otherwise, threatned that they would be taken to the Army Camp. They had no other alternative but to acceed to the Order, at about 8 p.m by getting the help of others who were on the road. The parapet wall which was in exsistence for over 100 years was broken. to satisfy the sadistic pleasure of Rajive Gandhi. This is only a very mild example of what our so called saviours are up to.

In fact Nagulam and Cheran were with me for 10 days and left last week. It appears to me that we have changed from a Sinhala domination to a North Indian domination which is worse. I do not want to go on adding to the misery, the people in Jaffna are under going directly due to the betrayal of Rajive and the TULF. This statement should convey the meaning to you.

We shall wait and see how things will turn out to be,

கொழும்பு - 6
13, பிப்ரவரி 1989

அன்பின் சகோதரனுக்கு,

.........................................

இங்கே—

'யாரும் தேர்தலில் வாக்களிக்கக் கூடாது' என்று யாரோ சுவரொட்டி ஒன்றை ஒட்டிவைத்ததற்காக - இந்திய அமைதிப்படை நம் வீட்டுச் சுவரை இடித்துத் தள்ளுமாறு கட்டாயப்படுத்தியது.

இந்தியப் படையினர் நம் வீட்டுக்கு வந்து - சுவரொட்டி ஒட்டப்பட்ட சுவரின் பகுதியை உடைக்கவேண்டும் என்றும் - இல்லையெனில் படை முகாமுக்கு அழைத்துச் செல்லப் போவதாகவும் என் மனைவியையும், மகனையும் அச்சுறுத்தினார்களாம். இரவு 8 மணிக்கு தெருவில் நின்றவர்களை அழைத்து - வேறு வழி இன்றி நமது வீட்டார் அந்தச் சுவரை இடித்துத் தள்ளி இருக்கிறார்கள். 100 ஆண்டுகளுக்கு மேல் அசையாது நின்ற நம் மதிற்சுவர் ராஜீவ்காந்தியின் வெறித்தனக்கிளுகிளுப்புக்காக உடைத்துத் தள்ளப்பட்டிருக்கிறது. நம்மைக் காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு இங்கே வந்தவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதற்கு இது ஓர் சிறு எடுத்துக்காட்டு என்பேன்.

சிங்கள ஆதிக்கத்தின் பிடியிலிருந்து வடஇந்திய ஆதிக்கத்தின் கைக்கு நாம் அடிமைகளாக மாற்றப்பட்டுள்ளோம் போல் தோன்றுகிறது. சிங்கள ஆதிக்கத்தைவிட இது இன்னும் அதிகக் கொடுமையாகவே உள்ளது. இந்தியப் படையினரில் 99% பேருக்குத் தமிழோ ஆங்கிலமோ தெரியவில்லை. இந்தியப்படை என்ன விரும்புகிறது என்பதை இங்குள்ள மக்களாலும் புரிந்து கொள்ள முடியவில்லை - வயது முதிர்ந்த பெரியவர்கள் கூட இந்தியப் படையின் - கூலிகளால் அடித்து நொறுக்கப்படுகிறார்கள்.

தேர்தலுக்குப் பின்பு எப்படி நிலைமைகள் மாறுகின்றன என்று பார்க்கலாம்.

அன்புத் தம்பி

www.tamilarangam.net

# செய்திக்கதிர்

### இந்தியப்படை ஈ.பி.ஆர்.எல்.எப். முயற்சி தோல்வி

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாகத் தடையை முறியடிக்க இந்தியப் படையும், வடகிழக்கு மாகாண பொம்மை அரசும் எடுத்த முயற்சிகள் படுதோல்வியடைந்துள்ளன.

விடுதலைப் புலிகள் சிவில் நிர்வாகத் தடையை அமுல்படுத்தியதைத் தொடர்ந்து வடபகுதி வங்கிகளும் யாழ் செயலகமும் வாரத்தில் 3 நாட்கள் மட்டுமே இப்பொழுதும் இயங்கி வருகின்றன. இதனையடுத்து வடபகுதி வங்கிகளையும் மற்றும் யாழ் செயலகத்தையும் வாரத்தில் ஐந்து நாட்களும் இயங்கவைக்க இந்தியப் படையும் ஈ.பி.ஆர்.எல்.எப். இன் வடகிழக்கு மாகாண அரசும் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தது.

### பொம்மை அரசைப் பாதுகாக்க சிங்களப்படை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஈ.பி.ஆர்.எல். எப். அரசின் நிர்வாகத்தை உறுதிப்படுத்த மக்கள் தொண்டர்படை அமைக்கப்படுகிறது என்றும் அப்படி அமைக்கப்பட்டதும் இந்தியப் படை வெளியேறும் என்றும் இந்திய இலங்கை அரசுகளும் ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் பொம்மை அரசும் கூறிவருகின்றன.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எப். இன் மக்கள் தொண்டர் படையில் சேர தமிழ் மக்கள் முன்வரவில்லை. வவுனியா மாவட்டத்தில் தொண்டர் படைக்காக விண்ணப்பித்த 50 பேரில் 30 பேர் சிங்களவர்கள். 20 பேர்தான் தமிழரும், முஸ்லீம்களும் ஈ. பி. ஆர். எல். எப். பொம்மை அரசைக் காக்கப்போவது சிங்களப்படையா?

### உலக அதிசயம்

66.82 வீதம் துண்டுவிழும் (பற்றாக்குறை) பட்ஜெட்டை தயாரித்துள்ள இலங்கை அரசு பாதுகாப்புச் செலவினங்களுக்கு மட்டும் 10.76 வீதம் ஒதுக்கியுள்ளது. இத்தனைக்கும் இது வரை தமிழர் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கான இராணுவச் செலவையும் பணியையும் இந்திய அரசு மேற்கொண்டிருந்தும் இந்தநிலை. இல்லையெனில் இலங்கை அரசு பாதுகாப்புக்கு பட்ஜெட்டில் 20 வீதத்துக்கும் அதிகமாக ஒதுக்கவேண்டியிருந்திருக்கும். உலகில் பாதுகாப்புக்கு இத்தனை வீதம் ஒதுக்கும் நாடு வேறு கிடையாது. அதுவும் 65 வீதத்துக்கு மேல் பற்றாக்குறை பட்ஜட்டைத் தயாரிக்கும் நாடு இவ்வளவு தொகை பாதுகாப்புக்குச் செலவிடுவது அதிகமே.

15-3-89 அன்று இலங்கை நிதியமைச்சரால் அறிவிக்கப்பட்ட பட்ஜட்டில் மொத்தச் செலவினங்கள் 8,298,08,94,000 ரூபா. பற்றாக்குறை (துண்டு விழும் தொகை) 5545 கோடி ரூபா. பாதுகாப்புச் செலவினம் 891,77,56 ஆயிரம் ரூபா.

—தினபதி 16-3-89

### இந்தியப்படை வெளியேறவேண்டும் இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானம்

- ★ வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகள் அங்கீகரிக்கப்படவேண்டும்.
- ★ இலங்கை - இந்திய ஒப்பந்தம் கிழித்தெறியப்பட வேண்டும்.
- ★ கிழக்கிலிருந்து இந்தியப் படையை வெளியேற்றவேண்டும்.
- ★ பயங்கரவாதம் தோற்கடிக்கப்படவேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானங்களை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மத்திய குழு ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது. சங்கத்தின் செயலாளர் எச். என். பெர்ணாண்டோ அறிக்கையொன்றில் இத்தகவலைத் தெரிவித்துள்ளார். —உதயன் 16-3-89

### சிங்களக் குடியேற்றத்துக்கு கட்டப்பொம்மன் கழகம் எதிர்ப்பு

''இலங்கை - இந்திய அமைதி ஒப்பந்தம் இரு ஒப்பந்தக்காரர்களின் சுயநலத் தேவைகளைப் பூர்த்தி செய்ததுடன் அவர்களுடன் சேர்ந்து நின்றவர்களுக்கும் நன்மை புரிந்தது.''

''அரசியல் அதிகாரத்தினைத் திரட்டும் பொருட்டு சனத்தொகையில் ஒரு பகுதியினரை சிறுபான்மையினர் வாழும் பகுதிகளில் குடியேற்றி அரசியல் அதிகாரத்தினை ஏகபோகமாக்குவது நிறுத்தப்பட வேண்டும்.''

''1948-ம் ஆண்டுக்குப்பின் அரசினால் சிறுபான்மையினர் (தமிழர்கள்) வாழும் பகுதிகளில் குடியேற்றியவர்களை அகற்றுவதுதான் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர ஒரு நியாயமான தீர்வாகும்.''

இவ்வாறு உடுவில் கட்டப்பொம்மன் கழகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. —வீரகேசரி 16-3-89

www.tamilarangam.net



**பொம்மை அரசின் கூலிப்படையில் சேர சுவரொட்டி அழைப்பு**

வட கிழக்கு மாகாண பொம்மை அரசுக்கு பாதுகாப்புக்காக மக்கள் தொண்டர்படை என்ற பெயரில் திரட்டப்படும் படையில் சேர தமிழர்கள் எவரும் முன்வரவில்லை.

எனவே தொண்டர்படையில் சேருமாறு முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாக சுவரொட்டி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தாயகத்தைப் பாதுகாக்கத் தொண்டர்படையில் சேருமாறும் கவர்ச்சியான சம்பளம் ரூபாய் 1200, இலவச உணவு, இருப்பிடம், போக்குவரத்து வசதி, பதவி உயர்வு ஆகியன வழங்கப்படுவதாகவும் அச்சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியப்படை முகாம்களுக்கு அருகேயே பெரும்பாலும் இச்சுவரொட்டிகள் காணப்படுகின்றன. —வீரகேசரி 21-3-89

**விடுதலைப் புலிகள் எச்சரிக்கையையடுத்து போலீசாரின் சீருடை சிவிலுடையானது**

யாழ் மாவட்ட போலீஸ் அதிபரின் உத்தரவையடுத்து நீண்டகாலத்திற்குப் பின் சீருடையில் கடமையில் ஈடுபட்ட போலீசார் சீருடையுடன் பணியாற்றக்கூடாது என்று விடுதலைப் புலிகள் விடுத்த எச்சரிக்கைக்கு அமைய மீண்டும் சீருடைகளைக் கைவிட்டு சிவிலுடையுடன் பணியாற்றுகின்றனர்.

**யாழ்ப்பாணத்துக்கு சிங்கள உதவிப் போலீஸ் அதிபர்**

நூறு வீதம் தமிழர்கள் வாழும் யாழ் மாவட்டத்தில் உதவிப் போலீஸ் அதிபராகச் செயற்பட்டுவந்த திரு. ப. கந்தசாமியை கடந்த மார்ச் முதல் தேதியிலிருந்து தென்பகுதிக்கு இடமாற்றம் செய்துவிட்டு திரு. ஜெயசுந்தர என்ற சிங்கள உதவி போலீஸ் அதிபர் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் வடகிழக்கு மாகாண அரசின்கீழ் செயற்படுவாரா? அல்லது சிங்கள அரசின் நேரடி நிர்வாகத்தின்கீழ் செயற்படுவாரா என்பது தெரியவில்லை.

—உதயன் 23-3-89

**பொம்மை அரசின் முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்தனர்**

கடந்த பல மாதங்களாக விடுதலைப் புலிகள் விடுத்த சிவில் நிர்வாகத் தடை வேண்டுகோளை ஏற்று தமிழ்ப் பகுதிகளில் மாவட்ட செயலகம், வங்கிகள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் என்பன வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே செயற்பட்டுவந்தன, அத்தியாவசியப் பணிகளுக்கு மட்டும் விடுதலைப் புலிகள் விதிவிலக்கு அளித்துள்ளனர்.

தமிழ்ப் பகுதியில் பொம்மை அரசு ஆட்சிக்கு வந்ததன்பின் தமது அதிகாரத்தை நிலைநாட்ட எண்ணி ''விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக அரசு ஊழியர்கள் செயற்படுவது சகிக்க முடியாது எனவும் 23-3-89 முதல் அனைத்து ஊழியர்களும் வாரத்தில் ஐந்து நாட்களும் பணியாற்ற வேண்டும், என்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

அதையடுத்து 22-ந் தேதியிலிருந்து அத்தியாவசியப் பணிகள் தவிர ஏனைய அரசு பணிகளை முற்றாகப் புறக்கணிக்கும்படி விடுதலைப் புலிகள் இயக்கம் வேண்டுகோள் விடுத்தது. தமிழ் அரசு ஊழியர்கள் பொம்மை அரசின் மிரட்டலைப் புறக்கணித்து விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கடந்த 22-ந் தேதியிலிருந்து வேலைக்குச் செல்லவில்லை. மற்றும் தமிழ்ப்பகுதி அரச நிர்வாகம் முற்றாகச் செயல் இழந்துள்ளது. —உதயன் 2 -3-89

**பொம்மை அரசுக்கு ஆள் சேர்க்கும் பணியில் பிரிகேடியர் காலோன்**

பொம்மை அரசுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக இந்திய இலங்கை அரசுகளின் முயற்சியில் மக்கள் தொண்டர்படை என்ற பெயரில் ஒரு படை அமைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அந்தப் படையில் சேருவதற்கு தமிழ் இளைஞர்கள் யாரும் விரும்பவில்லை. விடுதலைப் புலிகளின் வேண்டுகோளை ஏற்று தொண்டர் படையை மக்கள் புறக்கணித்து வருகின்றனர்.

இதனால் மக்கள் தொண்டர் படையில் ஏராளமாகச் சேருமாறு இந்தியப்படையின் நகரக் கொமாண்டர் பிரிகேடியர் ஆர். ஐ. எஸ். காலோன் பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளார். ஆனால் தமிழ் மக்கள் தொடர்ந்து அந்தப் படையைப் புறக்கணித்து வருகின்றனர்.

—சஞ்சீவி 25-3-89

**வடகிழக்கு மாகாணத்தில் மீண்டும் பொதுத் தேர்தல்**
**முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் கோரிக்கை**

வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து சர்வ ஜன வாக்கெடுப்பை நடத்தி அப்பிரதேச மக்களின் உயிருடன் விளையாடக்கூடாது என்றும், ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணையாமல் வெளியே இருக்கும் இயக்கங்களை ஜனநாயக அரசியலுக்குக் கொண்டு வரும் வகையில் பேச்சுவார்த்தை நடத்தி மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும் என்றும்

www.tamilarangam.net



சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

—சஞ்சீவி 25-3-89

**அம்பாறை செயலகத்தில் தனிச் சிங்களத்தில் அலுவல்கள்**

கடந்த 40 ஆண்டுகளில் அத்துமீறிய சிங்கள‌க் குடியேற்றத்தால் பெருமளவு சிங்களவர்கள் குடியேறியுள்ளபோதிலும், 60 வீதத்துக்கும் அதிகமான தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்துவரும் அம்பாறை மாவட்டத்தில், ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பணிகள் அனைத்தும் தனிச் சிங்களத்திலேயே நடைபெறுகிறது.

தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டபோதிலும் இம்மாவட்ட ஆட்சித் தலைவர், மேலதிக ஆட்சித் தலைவர், மாவட்ட பொறுப்பதிகாரி உட்பட உயரதிகாரிகள் அனைவரும் சிங்களவர்களாகவே இருந்து வருகின்றனர்.

தேசிய மொழியென்றும் அரசகரும மொழி என்றும் அரசியல் சட்டத்தில் எழுதிவைப்பதால் மட்டும் தமிழ் மொழி அரியணை மொழியாகிவிடாது. அதை நடைமுறைக்குக் கொண்டுவர சிங்கள பெரும்பான்மை இனம் மனப்பூர்வமாக விரும்ப வேண்டும். அது தற்போதைய நிலையில் சாத்தியமில்லை.

—தினகரன் 25-3-89

**தரையில் பாதுகாப்பின்மையால் வான்வழிப் பயணம்**

''பஸ் வண்டியில் பயணம் செய்தால் உயிருடன் திரும்ப முடியுமா என்ற நிலையிலேயே நாம் விமானத்தில் பயணம் செய்கின்றோம்'' என்று வடகிழக்கு மாகாண சபையின் ஈ. என். டி. எல். எப். உறுப்பினர் இராசரத்தினம் மகாணசபைக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மாகாணசபையின் அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமா செய்தபின் ஜெயதிலகா ஆளும் கட்சியினர் சுகபோகமாக வாழ்கிறார்கள் என்று கூறிய குற்றச்சாட்டுக்கு பதில் அளித்துப் பேசும்போதே இராசரத்தினம் மேற்கண்டவாறு கூறினார். மாகாணசபையை அமைத்து வடகிழக்குப் பகுதியில் அமைதியை நிலைநாட்டி விட்டதாகவும், வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாகவும் ஒருபுறம் கூறிக்கொண்டு மறுபுறம் வீதியில் வாகனத்தில் செல்ல பாதுகாப்பின்மையால்தான் விமானத்தில் பயணம்

செய்வதாகக் கூறுவதன் மூலம் அவர்களது பொய்ப்பிரச்சாரம் அம்பலமாகியுள்ளது.

—வீரகேசரி 25-3-89

**30 நாட்களில் 90 தடவை பறந்த சாதனை**

வடகிழக்கு மாகாணசபையின் பெருமுதல்வர் வரதராஜப் பெருமாள் சிங்கக் கொடியை ஏற்றி ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 30 நாட்களில் அதிகாரங்களைப் பெறுவதற்காக 90 தடவைகள் கொழும்புக்கு விமானத்தில் பறந்து சென்றதாகவும் அவ்வேளையில் 8 தடவை ஜனாதிபதியைச் சந்தித்ததாகவும் மற்றைய பயணங்களின் போது ஏனைய அமைச்சர்களையும் அதிகாரிகளையும் சந்தித்ததாகவும் ஈ. பி. ஆர். எல். எப். பாராளுமன்ற உறுப்பினர் பிரேமச்சந்திரன் பாராளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

—வீரகேசரி 25-3-89

**விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாகத்தடை வெற்றிகரமாகத் தொடர்கிறது**

யாழ்ப்பாணத்தில் வங்கிக் கிளைகள், செயலகம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை என்பன விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாகத் தடைக்கு ஆதரவாக தொடர்ந்து மூடப்பட்டிருந்தன.

சில வங்கிகளுக்குமுன் இந்தியப்படையினர் காணப்பட்டனராயினும் ஊழியர்களையோ பொதுமக்களையோ அங்கு காண முடியவில்லை.

—உதயன் 29-3-89

**இந்தியப்படையின் புதிய முகாம்**

இந்தியப்படையினர் படிப்படியாக வாபஸ் பெறப்படுவதாக கூறப்படும் அதேவேளையில் புதிதாக இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன. பூநகரி வாடியடியில் பெருந்தெருக்கள் திணைக்களத்துக்கு அருகாமையில் இந்திய இராணுவ முகாம் ஒன்று புதியதாக அமைக்கப்பட்டுள்ளது.

—உதயன் 2-4-89

**முஸ்லீம்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிக்கு நஷ்டஈடு இல்லை**

அம்பாறை மாவட்டத்தில் ஹிங்குரானை சீனிக் கூட்டுத் தாபனத்துக்காக முஸ்லீம் விவசாயிகளுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாயக் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கென அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவும் இல்லை. சுவீகரிக்கப்பட்ட காணிகளில் கரும்பு செய்கை பண்ணப்படவும் இல்லை.

—தினபதி 5-4-89

www.tamilarangam.net

**ல்கலைக் கழக மாணவன் மரணம்
இந்தியப்படை அதிகாரியை ஆஜராக
நீதிமன்றம் உத்தரவு**

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 2-வது ஆண்டு மாணவரான மட்டக்களப்பு மாவட்டம் கோட்டைக்கல்லாறைச் சேர்ந்த இ. நீதிநாதன் (27) என்னும் மாணவன் மரணம் கொலை என மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜனாப் எம். சி. காரியப்பர் தீர்ப்பு வழங்கினார்.

மேற்படி மாணவன் விடுமுறைக்கு வீட்டுக்கு வந்த சமயம் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு மறுநாள் அவனின் சடலம் உறவினர்களிடம் இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டது.

மரண விசாரணைக்கு சமுகமளிக்குமாறு இந்தியப்படையின் ஓந்தாச்சிமடம் முகாமின் பொறுப்பதிகாரிக்கு மாவட்ட நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

—உதயன், 9-4-89

**வவுனியாவில் மேலும் ஒர் இந்திய இராணுவ முகாம்**

வவுனியா மாவட்டம் ஈச்சங்குளம் பகுதியில் இந்தியப் படையினர் புதிய முகாம் அமைத்து நிலை கொண்டுள்ளனர்; இங்கு நிலை கொண்டுள்ள இந்தியப் படையினர் இப் பகுதியூடாகச் செல்லும் பொதுமக்களைச் சோதனை செய்வதுடன் இரவு, பகல் நேரங்களில் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

—வீரகேசரி 11-4-89

**நேரடிப்பேச்சுக்கு வருமாறு!
இலங்கை அரசு அழைப்பு!
விடுதலைப் புலிகள் ஏற்றனர்.**

நேரடிப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இலங்கை அரசு 13-4-89 அன்று அழைப்பு விடுத்தது.

சமரசப் பேச்சுக்கு வருவதென்றால் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு இந்திய, இலங்கை உடன்பாட்டை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இந்திய அரசு நிபந்தனைகளை விதித்திருந்தது.

ஆனால் இலங்கை அரசு அது போலன்றி எதுவித முன் நிபந்தனைகளுமின்றி விடுதலைப் புலிகள் கோரிய முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் சம்மதித்து விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறது.

எனவே விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

—சஞ்சீவி 15-4-89
—உதயன் 16-4-89

**யாழ் பல்கலைக் கழகம் மட்டுமே இயங்குகிறது,**

நீண்ட காலமாகத் தென்னிலங்கையில் நடைபெற்று வரும் வன்முறைச் சம்பவங்களினால் அப்பகுதிப் பல்கலைக் கழகங்கள் இயங்கவில்லை. ஆனால் தமிழ்ப்பகுதியில் உள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மட்டும் இந்தக் கல்வி ஆண்டு (1988 - 89-ம்)க்கான புதிய தவணை நடைபெற்று வருகிறது. வடக்கு கிழக்கில் பல்வேறு சிவில் நிர்வாகத் தடைகளை விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வந்தாலும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கல்வி தடைப்படாது கல்லூரிகள், பாடசாலைகள் இயங்க விடுதலைப் புலிகள் ஆதரவளித்து வருவதனாலேயே இப் பகுதியில் பல்கலைக் கழகமும், கல்லூரிகள், பாடசாலைகளும் இந்தியப் படையினரின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் ஒழுங்காக இயங்குகின்றன.

—உதயன் 17-4-89

**''கைது செய்த பல்கலைக் கழக
மாணவரை விடுவிக்குக''
இந்தியப்படைக்கு பல்கலைக்கழக மாணவர்
ஒன்றியம் அறிக்கை**

இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்ட யாழ் பல்கலைக்கழக முதலாம் வருட மாணவன் செ. சிறீஸ்கந்தராஜாவை உடனடியாக விடுதலை செய்யும்படி யாழ் பல்கலைக் கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுவித்துள்ளது.

**வாகனத்தினால் மாணவனை மோதிக்கொன்ற
இந்தியப்படைச் சாரதியைக் கைது செய்ய
நீதிமன்றம் உத்தரவு!**

அண்மையில் மட்டக்களப்பு சின்ன ஊறணிச் சந்திப்பில் திருப்பெருந்துறையைச் சேர்ந்த ஏ. மகேந்திர ராஜன் என்ற 8-வயது மாணவனை மோதிக்கொன்ற இந்தியப்படை வாகனத்தின் சாரதியை அடையாளம் கண்டால் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தும்படி மட்டக்களப்பு பதில் நீதிபதி கா. தங்கவடிவேல் போலீசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

—உதயன் 18-4-89

www.tamilarangam.net

களத்திலிருந்து

# ஒரு வீராங்கனையின் கடிதம்

தமிழீழம்,
30-3-89

அன்புள்ள அம்மா,

நான் 1985-ம் ஆண்டு முதலுதவி நிலையம் என்றும், மாதர் சங்கம் என்றும் வெளியே புறப்பட்டபோது கொஞ்சமேனும் தயக்கம் இன்றிப் பல விதமாகப் பேசியவர்கள், இன்று நாணித் தலை குனியும் நிலையில் எங்கள் நாட்டின் நிலை உள்ளது.

அம்மா, நீங்கள் அப்போது எனக்குப் பூரண ஆதரவும், நல்ல கருத்துக்களும் தந்து அனுப்பினாலும் அடுத்தவரின் பேச்சுக்கேட்டுக் கலங்கிய காலங்களை நான் மறக்கவில்லை. நீங்களே உங்களை மீறித் தடைகள் போடும் அளவிற்குச் சமூகத்தின் பேச்சுத் திறமை. அவற்றை நான் மீறும்போது எனக்கும் உங்களுக்கும் இடையில் தேவையற்ற மனக்குழப்பங்கள். இன்று அவை தீர்ந்திருக்கும். எமது போராட்டத்தின் தேவைகளை அனைத்து மக்களும் புரிந்து கொண்டனர். வீட்டினுள் முடங்கி இருந்தோரும் வேலியின் இடையினால் வீதியைப் புதினம் பார்த்தோரும் எங்களின் அணிவகுப்பில் சேர்கின்றனர்.

அம்மா, நீங்கள் கூறுவீர்கள் எங்களுக்குப் பாதுகாப்பு அப்பா, அண்ணா, கணவன் என்று. இன்று இவர்கள் முன்னிலையிலேயே எம்மைக் கொன்றும், கடித்துக் குதறியும் வருகின்றனர். இந்த அந்நிய கழுகுகளிடம் இருந்து எம்மைப் பாதுகாக்க நாம்தான் ஆயுதம் ஏந்தவேண்டும். இனியும் எங்கள் கண் முன் எங்கள் குடும்பத்தவர்கள் தாக்கப்படுவதோ அல்லது நம்மை அழிக்கும்போது இயலாது அழுது மன்றாடிக் கொண்டிருப்பதோ நீடிக்கக் கூடாது. எங்கள் மக்களைத் தாக்கும் கரங்கள் துண்டாடப்பட வேண்டும். எங்கள் மண்ணிலே படும் எதிரியின் கால்கள் வெட்டப்பட வேண்டும்.

அம்மா, ஏற்கெனவே நீங்கள் இரு ஆண்பிள்ளைகளைப் பறிகொடுத்தும், இன்று தங்கை அமுதாவையும் அனுப்பத் தயாராக இருப்பதை அறிந்தபோது எமது இனத்தின் விடிவு வெகு தூரம் இல்லை என்பது புரிகிறது. உங்களைப் போல பல தாய்மார்கள் முன்வரும் செய்திகள் எமது கரங்களை வலுப்படுத்துகின்றன. மக்களது போராட்ட எழுச்சிகள் எமது கால்களை வேகமாக நடக்க வைக்கின்றன.

அம்மா, பெரியண்ணாவை 86-ம் ஆண்டு நிகழ்ந்த ஊர் சுற்றி வளைப்பின் போது சந்தேக நபர் என்ற பெயரில் அழைத்துச் சென்றார்கள். சில நாட்களில், அவர்கள் அண்ணாவைக் கொன்ற செய்தி சந்தேகம் இன்றிக் கிடைத்த போது நானும் குளறி அழுத சம்பவம் இன்றும் என் நெஞ்சில் பசுமையாக உள்ளது. ஆனால் 87-ம் ஆண்டு சின்னண்ணாவின் வீரமரணச் செய்தி கேட்டபோது அழுகை என்பது வெளிவரவில்லை. பாசத்தினால் உள்ளம் குமுறினாலும், உதடுகள் 'சின்னண்ணா' எனத் துடித்தாலும் வார்த்தைகள் வெளிவரவில்லை. கண்ணீரே மனத்தின் வேதனைகட்கு ஒத்தடம் இட்டது. இம் மாற்றங்கள் எம் இனம்பட்ட காயத்தின் வடுக்களே. சின்னண்ணாவின் இழப்பினை எமது சுதந்திர தாகம் மறைத்துவிட்டது. அவரது இழப்பு இறப்பில்லை. இப் பிரிவு, அர்த்தம் உள்ளது. அவரது இறப்பு அவர் ஏற்றுக்கொண்ட சுதந்திர வாழ்வு. எம் இனத்தின் விடிவிற்காகப் போராடும்போது நேரடி மோதலில் துப்பாக்கிக் குண்டொன்றை ஏற்று அவர் தழுவிய மரணம் வீரமரணம். வாழ்ந்தால் சுதந்திரமாக எமது உரிமைகளுடன் எமது தாயகத்தில் வாழவேண்டும். அன்றேல் அந்தச் சுதந்திரத்திற்காகப் போராடி மடிவதே மேல்.

'எமக்கென' ஒரு தாயகம் அமைக்கும் வரை 'எமக்கென' ஒரு குடும்பம் அமைப்பதனை நான் விரும்பவில்லை. இனியும் நாம் அடக்கி ஒடுக்கப்படும் நிலையில் இருப்பதனை என்னால் அனுமதிக்க முடியாது. இன்று நாட்டில் நிலவும் மாகாணசபை, பாராளுமன்றம் என்பவற்றை நம்பி ஆயுதப் போராட்டத்தினைக் கைவிடும் நிலையில் நானோ, எமது இயக்கமோ இல்லை. இவை எமக்கு எதிரியால் ஏற்படுத்தப்படும் வழமையான தடைகளே. மக்களது எழுச்சிகளை அடக்கி போராட்டத்தினைத் திசை திருப்பச் செய்யப்படும் சதி வேலைகளே.

இங்கு தரப்படும் உரிமைகள் வெறும் வாய்ப்பேச்சுக்களே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேவையாயின் சட்டத்தில் எழுதி வைக்கலாம். ஆனால் அவை நடைமுறைக்குச் சாத்தியப்படாதவை. சிங்கள மக்களிடையே மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள முதலாளித்துவ அரசுகள் தமது அரசியல் இலாபம் கருதி இரு இன மக்களிடையேயும் பகைமையை வளர்ப்பதிலேயே முன் நின்றன. சிங்கள மக்களிடையே இன வெறிதனை ஏற்படுத்தி தமிழ் மக்கள் மேல் வன்முறையினைக் கட்டவிழ்த்து விட்டதன் மூலம் இனக் கலவரங்களை ஏற்படுத்தி இரு இனத்திடையேயும் சேர முடியாத விரிசலை ஏற்படுத்தி விட்டனர். இனியும் ஒற்றுமை, சகவாழ்வு என்ற போலி நாடகத்தில் நாம் நம்பிக்கை கொள்ள முடியாது. இழப்புக்கு அஞ்சி ஆயுதங்களைக் கீழே போட முடியாது. இவர்கள் மக்களின் உழைப்பின் இலாபத்தையும் சிலரது உயிரையும் மட்டுமே அழிக்க முடியும். ஆனால் இதனைக் கருத்திற் கொண்டு எமது மக்களின் மண்ணின் வளங்களும் நிலமும் பறிபோவதனை நாம் அனுமதிக்க முடியாது.

எமது உரிமைகள் உறுதிப் படுத்தப்படல் வேண்டும். இது எமது சுதந்திர தாயகத்திலேயே உறுதிப்படுத்தப்படும் என்பதனைக் கடந்த கால வரலாறுகள் எமக்குத் தெளிவாக்குகின்றன. நாம் போராடுவது எமது இழந்த உரிமைகளுக்காகவே. இம்மண் எங்கள் சொந்த மண். நாம் எம்மையே ஆண்ட மண். இன்று எங்கள் மண்ணிலேயே நாங்கள் ஒடுக்கப் படுகிறோம். இம் மண்ணின் மீட்பே எமது சுதந்திரத்தை நிதர்சனமாக்கும். நாளைய எமது மண்ணின் விடிவிற்காகவும், எம் இனத்தின் சுதந்திரத்திற்காகவும், குழந்தைகளின் மகிழ்விற்காகவும் எமது போராட்டத்தினை நாம் உறுதியுடன் முன்னெடுத்துச் செல்வோம்.

அம்மா, அக்காவின் சுட்டிப் பயல் குகனும், செல்ல மகள் மைதிலியும் வளர்ந்துவிட்டார்கள் என எண்ணிப் பார்க்கும் போது மகிழ்ச்சியினால் மனம் துள்ளுகிறது. குகன் பாலர் பாடசாலை போவதாக அறிந்தேன். அவன் பிஞ்சுக் கரங்களிலே விளையாட்டுத் துப்பாக்கியுடன் திரிவதனை அறிந்தபோது என் கைகள் வலுவடைகின்றன. அவன் கூறும் "ஆமிக்காரனைச் சுட்டுச் சுட்டுத் துரத்துவேன்". என்ற வார்த்தைகள் என் செவியில் இப்போதும் ஒலிக்கின்றன. என் கண்கள் பனிக்கின்றதம்மா. மைதிலியும் தன் மழலை மொழிகள் வீடு முழுக்கக் கேட்கக் கலகலத்துத் திரிவதாக அறிந்தேன். "மாமாவையும், சித்தியையும் போலவே தான் நானும்..." என்று கூறிக் கொண்டு இடுப்பிலே விளையாட்டுக் கைத்துப்பாக்கியையும் செருகிக்கொண்டு ஒளித்து விளையாடுகிறார்களாம்

அம்மா, நிச்சயம் இவர்கள் களம் வரவேண்டாம். நாம் மீட்கும் எமது தாயகத்தைக் காப்பதற்கு இவர்கள் தயாராகட்டும். எங்கள் மழலைகள் களத்திற்கு வரவேண்டாம். எமது விடுதலை எங்களாலேயே மீட்கப்பட வேண்டும். இப் போராட்டம் அடுத்த சந்ததிக்கும்...வேண்டாம். எங்களோடு முடிவுறட்டும்.

அம்மா, உங்கள் பங்களிப்புகள் எம் இனத்தின் விடுதலையினை விரைவு படுத்தும்.

இப்படிக்கு,
அன்பு மகள்,
சுரபி

★



**சன்மானம்**

ஈழத்தில்
தன் மானத்தை
அடமானம் வைத்துவிட்டு
அவமானத்தை
சன்மானமாகப்பெற்றுத்
திரும்புகிறது
ராஜீவின்
அமைதிப்படை.

*நன்றி :*
THE Island (30-4-89)

www.tamilarangam.net

# புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் மூலமே

## பெண்கள் விடுதலை பிறக்கும்

ஆங்கில ஆதிக்கர்களிடமிருந்து சிங்களவர்களிடம் சிறீலங்காவின் ஆட்சி கைமாறியதிலிருந்து, ஒடுக்கப்பட்டு வந்த ஈழத் தமிழினம், இன்று மேலுமொரு அந்நிய சக்தியான இந்திய வல்லாதிக்கத்தினாலும், அதன் கைப் பொம்மைகளான நம்மினத் துரோகிகளாலும், ஒடுக்கப்பட்டு வருகின்றது.

இதை எதிர்த்து, நம்மினத்தின் சுதந்திரத்தையும் இறைமையையும் பாதுகாக்கின்ற ஒரு பாரிய சக்தியாக விடுதலைப் புலிகளாகிய நாம் பரிணமித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒடுக்கப்படுகின்ற தமிழ்த்தேசிய இனத்தின் பெண்கள் சமுதாயமோ மேலுமொரு ஒடுக்குமுறையான சமுதாய ஒடுக்குமுறையால் காலாகாலமாக அவஸ்த்தைப்பட்டுவருகின்றது. இவர்களின் மீட்சிக்கான பணியினைச் சம காலத்திலேயே ஆற்றிச் செல்ல வேண்டிய பொறுப்பு விடுதலைப்புலிகளின் மகளிர் படைப் பிரிவிற்கும் சமுதாயத்தில் பெண்களிற்கும் உரிய ஒன்றாகும்.

பெண்கள் மீதான ஆண் மேலாதிக்க ஒடுக்குமுறையும் அதை நியாயப்படுத்தும் பாரம்பரிய கலாச்சார ஒடுக்குமுறைகளும் ஒழிக்கப்படும் வரை, பெண்களின் வாழ்க்கையில் சுதந்திரமென்பது சமுத்திரத்தின் அடியில் முத்தே.

எனவே பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளைப் பிரயோகிக்க முடியாதவாறு, பெண்கள் நிலை பற்றித் தெளிந்த கருத்தையும், புரட்சிகரச் சிந்தனைகளையும், செயற்பாட்டையும் சமுதாயத்தில் உருவாக்குவதோடு பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடையாகவுள்ள சகல தடைகளையும் அகற்ற வேண்டியதுமான கடப்பாடு நமக்குரியதாகும்.

இன ஒடுக்குமுறைக்கெதிராகவும், அந்நிய ஆதிக்கத்திற்கெதிராகவும், சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுப் பிரச்சினைகளுக்கெதிராகவும் போராடிப் புதிய சமூக அமைப்பைக் கட்டியெழுப்ப முயலுகின்ற புரட்சிகர தேசிய விடுதலை இயக்கத்துடன் இணைந்த பெண்களியக்கமாக நின்று செயற்படுதலே எமது வேலைகளைச் சாத்தியமானதும் சுலபமானதுமாக்குகின்றது.


மேலும் ஆயுதப்புரட்சி மூலம் வெற்றி கண்ட சோசலிச நாடுகளான சோவியத் யூனியன், மக்கள் சீனக் குடியரசு, யூக்கோசிலாவியா, கியூபா, நிக்கராகுவா, வியட்நாம் போன்ற இன்னும் பல சோசலிச நாடுகளில் சகல துறைகளிலும் முன்னேற்றகரமாகக் காணப்படும் பெண்கள் நிலையும், சுதந்திரம் நிறைந்த அவர்களின் வாழ்நிலையும் நம்மை இன்னும் நமது போராட்டங்களில் வேகம் கொள்ளச் செய்கின்றன.

இலங்கை, இந்தியா, அமெரிக்கா, போன்ற முதலாளித்துவ நாடுகளில் வெறுமனே வாய்க் கூச்சல் போடும் பெண்களியக்கங்கள் பெண்களின் எந்த உரிமையையும் மீட்டெடுத்ததாக இதுவரை சரித்திரமில்லை.

எனவே, புரட்சிகரச் சக்திகளால் முன்னெடுக்கப்படும் ஆயுதப் புரட்சியோடிணைந்த பெண்கள் விடுதலை இயக்கமே நாட்டில் பெண்களுக்கான சுதந்திரத்தை உறுதி செய்யக்கூடிய இயக்கமாகும்.

(விடுதலைப் புலிகளின் பெண்கள் பிரிவு வெளியிடும் "சுதந்திரப் பறவைகள்" இதழில் வந்த தலையங்கம்).

www.tamilarangam.net



லெப்டினன்ட் கேர்ணல் மதி
(சுப்பிரமணியம் பாலச்சந்திரன்) மல்லாகம்.



# மதி

## அழியக்கூடியவனல்ல......

மதி
வானம் தொட நிமிர்ந்த மேனி
வரைகளை நிகர்த்த தோள்கள்
சரிந்து வீழ்ந்து விட்டதா?

சந்தன உடலம் எரிந்து முடிந்ததா?
ஆக்கிரமிப்பாளர்களின் கூலிப் பிசாசுகள்
அவனைக் குதறிக் கிழித்து விட்டனவா?

பார்க்கும் போது முரடனாகவும்
பழகும் போது குழந்தையாகவும்
எங்கள் குச்சொழுங்கைகளிலும் வயல்
வெளிகளிலும்
நடந்து திரிந்த உருவம் எங்கே?

சேது அணைதாண்டி வந்த 'வானரங்கள்'
அலாவுதீனின் 'அற்புதவிளக்கை' அழித்து
விட்டனவா?

மதி
யாழ்ப்பாணத்து ஒவ்வொரு அங்குல நிலமும்
இவனுக்கு மனப்பாடம்.
கடைசிவரை களத்தில் நின்ற வேங்கை.
காலனையும் கதிகலக்கிய வீரன்.

''நிரந்தர விடிவு தாயக மலர்வு.
இரந்ததைப் பெறுவது இழிவிலும் இழிவு''
இது வேங்கைகளின் வேதம்.

இருட்டில் தடுமாறிய தமிழீழ மக்களுக்கு
இவனும் ஒரு விளக்கானவன்.

மதி
அழியக் கூடியவனல்ல.........
அணுவிலும் கலக்கக் கூடியவன்.
மீண்டும்.........மீண்டும் பிறப்பான்
தமிழீழம் எட்டும்வரை
அவனது பிறப்பும் தொடரும்.

எங்கள் எதிரியென்று இனம் காட்டவே
எதிரிக்கும் ஒரு தகுதி வேண்டும்.
இங்கே இந்திய ராணுவம்
தகுதிகளை இழந்து அம்மணமாக நிற்கிறது.

உலகில் இப்படியும் ஓர் இராணுவமா?
காந்தி தேசமே! கண்ணீர் வடி
பாரத தேசமே! இங்கே பாடம்படி!

தோழன் மதியை நினைத்து
ஒரு கணம் மௌனம்.
மீண்டும் தொடர்கிறது
இதோ எங்கள் பயணம்......

www.tamilarangam.net

லெப். அஸ்பார் (14.4.89)



மேஜர் சுபாஷ் (14.4.89)





காப்டன் ஸ்ரீதரன் (தாடிசிறி)
(14.4.89)



காப்டன் பிரேமதாஸ் (14.3.98)

www.tamilarangam.net

தலைவருடன் மேஜர் கமல்

